

உ

சிவமயம்

அல்வாயூர் அளித்த

அருந்தமிழ்ப் பண்டிதரும், பிரபல எழுத்தாளரும்,

'வளர்பிறை', 'வண்டுவிடுதூது' முதலிய பலநூல்களின்

ஆசிரியரும்,

தேவரையாளிச் சைவ வித்தியாசாலையின் முன்னைநாள்

தலைமை ஆசிரியரும்,

அல்வாயூர்ச் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின்

ஸ்தாபகரும், தலைமை ஆசிரியரும்,

சிறுபான்மைத் தமிழர் ஜோதியும்

சைவத்தையும், தமிழையும் தமதிருகண்களாகப்

போற்றிப் பல்லாண்டுகளாகப்

பல துறைகளிலே தொண்டாற்றி வந்தவரும்,

பல நிறுவனங்களின் ஸ்தாபகரும்,

சைவ சமய சமரச சங்கச் செயலாளருமாகிய

# கவிஞர் திரு. மு. செல்லையா

ஆசிரியர் அவர்களின்

# நினைவு மலர்.

1967.

1933ம் ஆண்டு கவிஞர் வயிற்றிலே எழுந்த குடல்நோய்
அவரை வாட்டி வருத்திய காலம்.
படுக்கையிலிருந்தே
**கந்தவன முருகனை வேண்டிப் பாடினார்.**
நோய் நீங்கிக் குணமானார்.
அப்படல்களிற் சில ...அவர் குடும்பத்தினரிடம்
கேட்டறியப்பட்டவையாகும்.

# கந்தவனநாதர் காரிகை.

---

கட்டளைக் கலித்துறை.

மஞ்சாரும் கந்த வனத்தினில் வாசனை வாழ்வுறுசெம்
பஞ்சாரும் கன்னியர் நேசனை அன்பர் பரவுமரு
துஞ்சா மயில்வரு ராசனைத் தொண்டர் துயரகற்றும்
அஞ்சா அயில்கொளும் ஈசனைத் ஏத்தி யகம்மகிழே.

பஞ்சின் சுவைதனி லேவன்னி பின்பொறி பாய்ந்திடலங்
எஞ்சிக் கிடப்பன வேறில்லை யான்மயி லேறிவரு [கு]
வஞ்சிக் கொடியனை யார்புடை சூழ்ந்திட வந்தருள்செய்
அஞ்சிக்கிடக்குமென் உந்திக் கொடுந்துயர் ஆற்றுதற்கே

ஊனமே சிவசப்பு கண்ணரினைத் தந்த முருகனுண்டு
வனமே படிந்திட ஊறணி யூற்றங்கு வாய்ப்பவுண்டு
கனமே படிந்திடக் கந்த வனப்பதி காணவுண்டு
மனமே உனக்கினி வேறென் குறையுண்டு வாழுதியே.

ஆயும் பசுப்பா லுடன்வரு வார்சிலர் ஆறுமுகா
ஏயும் மலர்பழம் தாங்கி வருவர் இனியசிலர்
காயும் பலதெங்கின் காயும் கொணருவர் கற்பகமே
நோயும் படுந்துயருங் கொணர்ந் தேனிவை நோக்குதியே.

அஞ்சு முகத்தினுக் காறு முகமென் றுய்ந்துரைக்கின்
தஞ்சம் பிறிது ளதோகு கனேவர காதமியேன்
நெஞ்சம் கலப்புண்டு நோயா லிடியுண்டு நின் கழலாற்
கஞ்ச மலர்ச் சரண் புக்கனன் வேறென் கருதுவனே.

---



## அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா
## அவர்கள்

பொன்னுரு மல்லைவப் புரிசன்மன் போற்றுகலைத்
தன்னேரில் சைவத் தமிழோசன் — முன்னோர்நால்
ஆயும் மதிநுட்பன் அன்பன்செல் லையாகன்
நேயமொடு வாழ்க நெடிது.

— பண்டிதர் க. மயில்வாகனம், கரவை

தோற்றம்: 7-10-1906 மறைவு: 9-12-1966

இவை

யாழ்ப்பாணம்

# அல்வையூர் கவிஞர் மு. செல்லையா

தலைமை ஆசிரியர் அவர்களின்

அகால மறைவைக் குறித்த

## கையறுநிலைப் பாக்கள்.

---

### திதி நிர்ணய வெண்பா.

முத்தமிழு மாய்ந்துயர்ந்த மூதறிஞன் செல்லைய
வித்தகனார் விண்போய் விளங்கியநாள் — உத்தமச்சீர்
ஆண்டு பராபவமே யார்கார்த் திகையபரம்
பூண்டதிர யோதசியாய்ப் போற்று. 1

### ஆசிரிய விருத்தம்.

அலைமேவு திரையாழி தருமணிக் குவைநெடிய
வரணுக மிளிருமழகார்
அளகையம் பதியென்று புலவோர்கள் கவியெழுது
மந்தமிகு பொன்னிலங்கா
அரிவைதன் சிரமகுட வணியான யாழ்ப்பாண
வருமைத் திருத்தேவிதன்
அழகார்ந்த பிறைநுதற் திலகமென வொளிர்கின்ற
அல்வையூர்த் தொல்குடியிலே
அங்களனி யுழுமுழவர் தங்குமா மரபிலே
அறிஞர் வழிவழியிலே
அவதார மதுசெய்த கவிஞரு முருகப்ப
வண்ணலும் குஞ்சரப்பேர்
அம்மையும் சேர்ந்துமே செய்தவமெ லாந்திரண்
டம்புவிக் கொருவிளக்காய்
அஞ்ஞான விருள்மடிய மெஞ்ஞான வருள்பெருக
ஆரணம் புத்துயிர்பெற
அகிலவுல கிற்குமொளி தருபானு வெனவந்த
அற்புதச் சற்புத்திரன்
அதிகொடிய வறுமையினு மூயர்திங்கள் போலவே
அங்கம் மலர்ந்துநின்றுன்
அருள்மேவு திருஞான சம்பந்த னைப்போல
அன்னையின முலைப்பாலுடன்
அமுதனைய ஞானப்பால் தனையுமுண் டிளவயதில்
அரியபண் டிதனுயினுன்

அயராம லிரவுபகல் அங்கைதனி லேடேந்தி
அறிவுபெற் றோசனான்
அட்டதிசை யுங்கவினை விட்டமா கவிஞனாய்
அழைத்திடும் பட்டமுற்றான்

மலைமேவு திண்புயா சலவயித் தியலிங்க
மாதவன் மார்த்தாண்டனாய்
மதிக்கவரு பொன்னைய பூபால னருமைசெறி
மாதுசின் னத்தங்கமின்
மாதாவி னொருகும்பி பூத்தசோ தரனென்று
மலர்வாய் திறந்தழைக்கும்
மகிமைபெற் றவர்தமக் காகுவன செய்தின்ப
வாழ்விற் றிழைத்தமகவான்
மாதர்குல தீபமென வோது குணமாரிசன்
மார்க்க சௌபாக்யசீலி
மாரவேள் காமகாண் டந்தழுவி வருகினும்
மனநிலை தழும்பிடாமான்
மடநாண மச்சம் பயிர்ப்பிவைகள் அணிகொண்ட
மாசிலாத் தேவணங்காம்
மாண்புடைய நாகமுத் தம்மைதனை யவைமீது
மணமாலை சூட்டியினிதே
மதனனும் ரதியுமென வில்வாழ்வி னுலகுளோர்
மதித்திட விருந்தபெரியான்
மகப்பெறார் வானுலகு புகப்பெறா ரென்றோது
மறைதனை நன்குணர்ந்தே
மாலையுங் காலையுந் தவறாது குலதெய்வ
வழிபாடு செய்துநமது
மடியேந்தி யழுதுவந் தித்தபய னாயிந்த
மண்டலம் புரக்குமரச
மகனாக வண்ணாம லைக்கழக சங்கீத
மாணவ முதற்பிரிவிலே
மாட்சியுற வோங்குமன் னாம்விவேகானந்த
மண்டலா திபகோவுடன்

கலைமேவு சீனியர்ப் படியேறி யரியகலை
கற்கும் சபாலிங்கமே
கண்டுமொழி யுதவு பாரதியெனும் கற்பினுக்
கரசியாம் கனிமக்களாக
காசினியி லேதந்த கண்யமுறு தந்தையாய்க்
கருதிடத் திகழ்ந்தமகவான்

கனமதிப் புறுசீத னந்தந்து மகள்மகிழக்
        கணவனாய்த் தேர்ந்தெடுத்தே
கற்றோர் மதித்திடும் ரத்தின-ரா சாவெனக்
        கழறிடும் பீ.எஸ்.சீயைக்
காதலொடு மருகனாய்ச் சேர்த்துவைத் தானந்த
        கடலிற் படிந்தமாமன்
காண்டீப னாமண்டலநாம னேசனாய்க்
        காட்சிதரு சிவகுருமதன்
கட்டழக னாசின்னையதரு பொன்னம்மை
        கனிமொழிச் சிவமலரெனக் [க்
காட்சிதரு வோர்கடனை மைத்னமைத் துனர்களாய்
        கண்டுளங் களித்ததலைவன்
கமலமல ரலர்வதனி செல்லம்மை பாராட்டு
        கண்ணனைய தூயமருகன்
கந்தருவ னாசிவ குருவோச னன்புடன்
        கைதொழும் பிரியமாமன்
காருண்ய மிக்கசிவ மணிமழலை கற்பகக்
        காவெனுங் கணேசலிங்கம்
கானசிவ நாயகி யெனும்பேரை யன்புடன்
        கையேந்தி வளர்த்தபேரன்
கணக்கற்ற சுற்றப் பெருக்குடைய கொடியிலே
        கருவுருவெடுத்த புனிதன்

சிலைமேவு மதனென்ன வருமழகி னான்கொடிய
        தெவ்வருக் கிடியேறனான்
சிவநேய மாஞ்சங்கிலிக் காவல் பூண்டொழுகு
        சீரிய மனத்துறவினான்
செயமேவு குலவிளக் காகவே மானிடச்
        செனனமெடுத்தபுருடன்
திசையெங்கு மிசைசிதற விடுமுக்ர நரசிங்க
        தீரப்ர தாபவரதன்
தேனெனக் கலையமுது மாணவர்க் கூட்டிடுந்
        திறன்மிக்க தேவகுரவன்
தேசாபி மானமே யுருவான தென்றுலகு
        சீராட்டு வீரசிங்கம்
செந்தமிழ்த் தாய்க்கின்னல் வருமாயி னுயிரையும்
        தியாகஞ்செய் யுள்ளமுடையான்
சீர்த்திசெறி தலைமையா சிரியனாய்ப் பல்லாண்டு
        செப்புதே வரையாழியாம்
சிறப்புறு விதாலயத் தேகின்று பணிபூண்டு
        தேங்குபுக ழோங்கவைத்தோன்

தெள்ளுதமிழ் மொழியிலே வண்டுவிடு தூதொன்று
செய்துவா னொலிப்பகுதியார்
சிந்தைமகி ழுத்தந்த தங்கப் பதக்கமது
செங்கரம் பெற்றமகவான்
செய்யுளுண் டாக்கிடுங் கவிஞரிற் தலைமைசேர்
சீர்க்கவிஞ னாகின்றோன்
செகமீது நிகரற்ற கவிஞர்செல் லையவேள்
திடீரெனப் புவியையொருவித்
திங்களொடு பொங்கரவு கங்கையணி சங்கரன்
திருவடி யடைந்தனனரோ. 2

பன்னிருசீர் விருத்தம்.

ஓங்குமதி மத்தினிலே ஊக்கமெனும் நாண்பூட்டி
யொப்பிலா தொளிருகின்ற
உயர்ஞானக் கலையாழி யாழமெலா மாய்ந்துகடைந்
துலகுவக்கு மொருவனாகித்
தேங்கமுதச் சஞ்சீவி திரண்டுவர வதையள்ளிச்
சிந்தாமற் சேகரித்துச்
செப்பரும் பேரிலக்கியத்தின் செஞ்சாற்றையும் வடி
தித்திப்புச் செறிந்துதோன்றத் [த்துச்
தாங்குமுய ரிலக்கணப் பூங்காவினிலே தேன்வாங்கித்
தண்பாகு சமைத்துவைத்துத்
தாவிவரு மாணவர்க்கும் மற்றவர்க்கும் தானமிட்டுத்
தரணியுளோர் தந்தகீர்த்தி
வாங்கிநின்ற தவமகனைக் கவியரசனைச் செல்லையநாம
வாருதியைக் கலைமேகத்தை
வையமிழந் தருந்துயர மைக்கடலின் மேற்படிந்து
வருந்தாமல் வருந்திற்றம்மா. 3

வளம்பொலிந்த அல்வாயூர் புரிந்ததவம் திரண்டுருண்டு
வாய்ந்தகல வடிவமாகி
வஞ்சிநல்லாள் குஞ்சரத்தின் கும்பியிலே யுலகமுய்யும்
வகையிலொரு மகவாய்த்தோன்றி
உளம்பொலிந்த சற்குணத்தி னுறையாகி மறைநான்கி
னுண்மையெலா முணர்ந்துதேறி
ஒப்பில்லாச் சைவமெனும் பயிர்தழைத்தே ஓங்கிவர
வொழுக்கமா முரமுமிட்டுப்

பழங்குடியி னாசார நறவூற்றி யுயர்ஞானப்
பழமதனைப் பறித்தருந்திப்
பகரரிய சந்தான குரவனெனப் பாவலர்கள்
பரவிடுநற் பண்புவாய்ந்த [ள்ளோர்
இளங்களிறைக் கவிஞனெனும் பேர்படைத்துப் புவியிலு
ஏத்தெடுக்குஞ் செல்லையாவை [களெலாம்
இழந்தனமென் றறைந்தபறை கேட்டபொழு துயிர்
ஏங்கிநின் றிரங்கிற்றம்மா. 4

கும்பமுனி வன்பயந்த செந்தமிழ்தேன் மொழியமுதம்
குடல்நிறையக் குடித்துத்தேறிக்
கோதில்லாக் கவிஞனெனக் கவிவாணர் தந்தபட்டம்
கொண்டுயர்ந்த செல்லையாவுன் [னைத்
செம்பவள மலர்த்திருவாய் நின்றுதிர்ந்த செய்யுள்தன்
செவிமடுத்துக் கேட்பதற்குச்
சீரியநா வலனில்லை நல்லைச்சின்னத் தம்பியில்லைச்
சேனாதி ராயனில்லைக்
கம்பனில்லைத் திருவிளங்கோ வடிகளில்லைக் கூத்தனில்லைச்
செப்புகழேந்தியாம் புலவனில்லைக் [வைக்கும்
கருதுவர கவிகாளிதாசனில்லைப் புலவர்களைக் கலக்கி
கவினுடைய நற்காளமேகமில்லை [லந்து
உம்பருலகஞ் சென்றுகளிக்கின்றார் நானுமங்கே உடன்க
உரையாடித் திகழ்வோமென்றோ [ல்கிடக்க
ஒருவருக்கும் சொல்லாமல் தரையந்தவூர்தியிலே உட
ஓடிமறைந்தாய் புலவாவோதுவாயே. 5

---

ஆக்கம்:

**கரவை நாடககவிமணி திரு. எம். வி. கிருஷ்ணாழ்வார் அவர்கள்**

## செல்லையா சென்றிட்டாயோ!

—: செ. சுந்தரம்பிள்ளை :—

ஆன்றதமிழ்ப் புலமையினால் அறிஞர் போற்றும்
அல்வாயூர் அறிஞரேறே செல்லையா
ஈன்ற தமிழ் மாதாவை ஏங்க வைத்து
எங்கப்பா சென்றிட்டாய்; ஈழத்தோடு
சான்றோர்கள் வாழ்கின்ற தமிழகத்துத்
தகைசான்ற புலவரெலாம் தவிக்க எந்தத்
தோன்றாத விடம்சென்று மறைந்திட்டயோ
தூயதமிழ் என்னாகும் சொல்லுவாயே.

நாமகளோ நாவிழந்தாள்; நல்லோர் போற்றும்
நற்றமிழோ பொட்டிழந்தாள்; ஞாலம் வாழ்த்தும்
தேமதுரச் செந்தமிழார் செயலிழந்தார்
திக்கிழந்தாள் கவிதைப்பெண்; திருவிழந்தாள்
பாமரரும் பாவிழந்தார்; பயனிழந்தார்
பண்டிதரும் உன்னாலே பலமிழந்தார்
பூமலர்ந்து காயாகிக் கனியுமாகிப்
புசிக்கின்ற நேரத்தில் போய்விட்டாயே.

கட்டுரையால் கவிதையால் கருத்து மிக்க
ஹாஸ்யம்சேர் நாடகத்தால்; கற்றோர் நெஞ்சை
விட்டகலாச் செல்லையா விரைந்து நீயும்
விண்ணுலகம் சென்றிட்ட மர்மமென்ன
கட்டுதற்கோ கதரில்லை கவிதை பாடில்
கற்பதற்கோ ஆளில்லை என்று நீதான்
எட்டியடி வைத்தாயோ? இல்லையென்றால்
இருக்கின்ற சாதிப்பேய் விரட்டிற்றோதான்?

கந்தமுருகேசனொடு கல்வி போச்சு
கம்பீரப் பேச்சில்லை வேந்தனோடு
விந்தை மிகுசிறு கதைகள் (இ)லங்கையர்கோன்
விண்ணுலகம் சென்றவுடன் போச்சு தப்பா
சந்தமுறு கவியில்லைத் தங்கத் தத்தா
சாய்ந்தவுடன்; தமிழ் போற்றும் செல்லையாவே!
செந்தமிழை நீ மறந்து சென்ற காலே
சென்றதடா தமிழன்னை சிரிப்பேயின்று.

தெய்வத்தமிழ் வீசும் தோற்றமெங்கே?
திருநீறு மாயாத நெற்றியெங்கே

மெய்வந்த சைவம்வாழ் உள்ளம் எங்கே
மெலியாத வூக்கம்சேர் நெஞ்ச மெங்கே
கைவந்த கவியெங்கே கவிஞரே நீ
கைவிட்டுச் சென்றிட்ட தேசமெங்கே
பொய்யோடு புலாலூ ணைப் புறக்கணித்த
புனிதரே! புகலெங்கே இனியெமக்கே.

—"ஈழநாடு" 19-12-66.

---

## அல்வாயூர்ச் செல்லையா.

— ● அம்பி ● —

அல்வாயூர் என்றவுடன் அகத்தில் தோன்றும்
அமுதகவித் திருவுருவம் ஒன்றே நித்தஞ்
சொல்லாலுஞ் செயலாலுந் தூய்மை நாட்டிச்
சோதியுளச் சுடராலே சுருதி கூட்டிக்
கல்லாலே வாயில் அடைத்துள்ள கோயிற்
கடவுளரே கண்விழித்துத் திறக்கும் வண்ணம்
அல்வாயூர்க் கவிமணியார் வாழ்ந்தார் இன்றோ
அமுதகவி ஊற்றடைத்தே அமரரானார்.

கருவினிலே பிறவியிலே உயர்ந்தோன் நாளும்
கவின் தமிழும் சைவமுமே கண்ணாய்க்கொண்டோன்
எரிமலைபோல் நெஞ்சினிலே உணர்வு பொங்க
ஏழைகுலத் தாழ்ந்தவரின் உயர்வுக்காக
உரிமையுடன் வாழுகிற உலகைக்காண
உள்ளத்தால் உயர்ந்தே நின்றுழைத்த சான்றோன்
பெருநிதியாங் குணசீலம் பண்புமிக்கோன்
பேரிடிபோட் டின்றேனோ பிரிந்துசென்றான்.

கவியோடை உள்ளத்தின் கனிவைக் காட்டும்
கதராடை நெஞ்சத்தின் சாந்தி காட்டும்
தவறாத வெண்ணீற்றுக் குறிகள் மூன்று
சாதியிலே வுயர்வெதுவென் றழுத்திக்காட்டும்
குவிவாகும் கையோடு குழையுஞ் சொல்லுங்
குன்றாத தமிழர்தஞ் சால்பைக் காட்டும்
புவிமீதிற் புன்மையறப் புனிதமோங்கப்
புகழோங்க என்றென்றும் வாழ்வானம்மா!

—"ஈழநாடு" 19-12-66.

# கவித்திறம் காணப்போமோ?

அல்வையம் பதியிற் ளூேன்றி
அருட்கவி யாக்கிப் போந்த
தொல்புகழ் தமிழிற் றேர்ந்தோன்
தொழுநெறி பிறழா வாழ்ந்தோன்
இல்லறம் இனிதே காட்டி
இயற்கையை யெய்தி விட்ட
வல்லசெல் லையா உந்தன்
வடிவுரு காணப் போமோ?

துரும்பென இளைத்த தோற்றம்
துலங்கிடும் நீற்று நெற்றி
விரும்பிடும் கவிதை நெஞ்சம்
விளக்கிடும் இனிய தன்மை
இரும்பினும் இதயத் திண்மை
இசைத்திடு மூலகத் துண்மை
கரும்பெனப் பேசிக் கொள்ளும்
கவித்திறம் காணப் போமோ?

தெள்ளிய தமிழிற் பாடும்
தெளிஞனே, உன்போல் என்றும்
அள்ளியே சொரியும் ஆற்றல்
ஆரினிப் பெறப்போ கின்றூர்?
வள்ளலாய் மிளிர்ந்தாய், என்றும்
வழங்கினுய் கவிதை யின்பம்
கொள்ளைகொள் ளுள்ள மெல்லாம்
கொளளிடம் காணப் போமோ?

"பாரதி பவண" மென்று
பண்புயர் நாம மிட்டாய்
பாரதி உந்தன் நாவில்
பள்ளியே கொண்டு நின்ருள்
பாரதி யீந்த கல்வி
பரப்பிடு மாசா னுய்
பாரதி பாதம் சென்ற
பதமலர் காணப் போமோ?

மாதவம் செய்த ஈழம்
மதிக்குலக் கவிஞன் தன்னல்
சீதமாய் ஓங்கி நிற்க
செய்திட்ட கவிதை வெள்ளம்
ஆதவன் போக்கும் காராய்
அறியாமை யிருளை கற்றி
வேதங்கள் விளங்க நின்ற
விமலனைக் காணப் போமோ?

— சுண்டிக்குழி, யாழ். நாடகக் கலாமன்றச்
செயலாளர் திரு. வி. சி. குஞ்சிதபாதம்

---

## நின்பேர் வாழும்.

வண்டு விடுதூது தந்த செல்லையா!முன்
வானொலியார் பரிசளித்த பதக்கம் பெற்றாய்
கண்டுமிகப் பெருமிதமும் மதிப்பும் கொண்டோம்
காலனுக்கேன் அவசரமோ? கடவுளே! ஏன்
கொண்டு சென்ருன், பொறுமையில்லான்? ஈழநாடு
குறைவுடைய தின் மறைவால் கவிதை ஞாலம்
தொண்டருக்குள் தொண்டினனை இழக்குமாறு
தொடர்ந்து வந்தான்–காலன் அல்லன்; அவன்'அகாலன்!'

நெற்றியிலே பொட்டிருக்கும் உடலில் என்ருல்
நெடுஞ்சட்டை போட்டிருக்கும்; தமிழர் சால்பிற்
பற்றுடைய நனிநல்ல நெஞ்சம் அந்தப்
பால்வெள்ளைக் கதருடைக்குள் மறைந்திருக்கும்
முற்றிலுமே ஒழுங்கான செய்யுள் செய்து
முன்னடத்திச் செல்வதற்கும் அவா இருக்கும்
கற்றறிந்த அறிவிருக்கும்–செல்லை யாவைக்
காண்பதெங்கே இனிமேல் நாம்? பாவம், ஈழம்!!

காந்திவழி, சைவ நெறி-இவற்றின் மீது
காதலுடன் செயற்பட்டாய்; வஞ்சம் இல்லா
ஏந்தல ஐயா! உன்பணியை நாம் எல்லோரும்

ஏத்துகிறோம் தலைவணங்கி திடுதிப் பென்று
போம்படியாய் ஆகுமென்று நினைத்தோ மில்லை
புலமையுள்ள பண்பாளா, பிறவி ஆழி
நீந்தி விட்டாய் நீ எனினும் நினைவினின்றும்
நீங்க மட்டும் அனுமதியோம்; நின்பேர் வாழும்.

— கவிஞர் முருகையன்.

---

## முத்தமிழ் வித்துவ மணியே!
## இத்தரை இருள் மண்டியதோ!

கட்டளைக்கலித்துறை

அல்வாய் விளங்கு மதியா யமைந்திவ் வவனியிலே
நல்லா ரொருவரே நம்பா லுளரென்று நம்பிநிற்க [திங்கே
பொல்லாத பேரிடி வீழ்ந்தெல்லாம் பொடியாய்ப் போன
சொல்லாமல் சேவைக்கே மோட்டாரு மங்கேற்றிச்சென்
[றதையா.

எண்சீர் விருத்தம்.

எழுதிவைத்த தேடுறையும் மறையோன் தண்டம்
ஏற்றகவிச் செல்வனுமை எம்மை விட்டே
பழுதடையப் பிரித்துநிதம் பாரி லுள்ளோர்
பதைத்துடலம் வாடிடவே பணித்த தேனோ?
தொழுதகரப் பிணிதீர்த்த தேன்பா வெங்கே?
'தோகைமயி லாடி'வரம் செய்த செல்வா!
அழுதழுது நாம்துடிக்க ஐயோ! அந்த
அறிவில்லான் மறலிவிரைந் தழைத்திட் டானே.

சைவம்இருள் மண்டியபோ தந்த நாளில்
சமயமதக் குரவர்பலர் தோன்றி வந்தார்
செய்வதறி யாதபல சமூகத் தோர்க்கு
செப்பரிய நால்வரிலே முதல்வன் தேய்ந்தீர்
உய்வதெங்ஙன்? யாரிடம்போய் உரைப்போம் ஐயா!
உவந்துபணி செய்வீரே; உம்பர் முன்னே
பையரவக் கண்டனவைப் பாவல் லோர்க்கே
பாங்கொடுசேர்த் தனைபிரிக்கப் பறந்திட் டீரோ.

## சைவசமய சன்மார்க்கர் நால்வரில் மூவரும் புலம்பல்.

### எழுசீர் விருத்தம்.

பொருளொடு சொல்வின் இலக்கண முணராய்
புல்லரும் கவிபல யாத்தார்
இருளிடை யுலவும் தெப்பமாய்த் தீபம்
எதிரிலா வகையினே மாந்தோம்
அருளுறு சைவ மதநெறி பிறழா(து)
அறம்பொருள் இன்பமும் வீடும்
வரைவிலக் கணத்தோடியம்பிய உங்கள்
வாயுரை தெரிவதெஞ் ஞான்றே.

அறமுணர் சைவநன் னெறிதன தியல்பில்
அசைவுகண் டதுமென லாமோ
உறவினர் பெரியோர் உளங்களில் கூரும்
ஓவியம் பெயர்ந்தது மின்றே;
கறவையை இழந்த கன்றெனப் பல்லோர்
கதறிய பேரொலி உங்கள்
திறமுணர் திருச்செவி தெரியவு மிலையோ
தேன்தமிழ் ஓதிய செல்வா!

— அந்நாரின் மாணவன் சாஸ்திரி ச. தம்பிஐயா.

---

## வதிரி நாடகக் கலாமன்றத்தின் அனுதாபம்.

### வெண்பா.

அல்வாயூர் தந்த அருங்கவிஞர் செல்லையா
சொல்லாம லேன்போனாய் சொல்லையா—நல்லோனே
பாவதுதான் கேட்டுப் பரவசமாய் நிற்கஇனிப்
போவதுதான் எங்கே புகல்.

ஒய்வுபெற்ற காரணத்தால் உந்தனுக்கு நாம்சிறிது [னே
பாவிரித்துப் பண்புசெய்யப் பார்த்திருந்தோம்—ஆய்வல
நோயொன்று மின்றி கொடிப்பொழுதி லேமறைந்து
போய்விட்ட தெங்கோ புகல்.

வண்டுவிடு தூதும் வளர்பிறையும் தந்துநின்று
கண்டவிமெல்லாம் கலை வளர்த்தாய்—தண்டமிழால்
பாடிப் பரவியநின் பண்ணூர்ந்த வாய்க்கரிசி
கூட்டியிட்டோம் உள்ளம் குழைந்து.

இல்லையினி எங்களுக்கு ஏற்றகவி உந்தனைப்போல்
பல்துறைக்கும் பாரினிலே பாடிவந்தாய்—செல்லையாப்
பண்டிதனே உன்னையினிப் பார்க்குநாள் எந்நாளோ
எண்டிசையும் ஏங்கினவே இன்று.

நாடாருமே புகழ நற்பாக்கள் பாடிவிட்டுக்
கூடாகவே யுடலைக் கொண்டனையோ—தேடரிய
செல்வாநின் தித்திக்கும் தெள்ளமுதப் பாவினம்போல்
சொல்வாரும் இங்குளரோ சொல்.

சேவைசெய்யும் தீவிரத்தால் தேவருனையே யழைத்துச்
சேவைசெய்ய வைத்தனரோ செல்லையா—பாவெழுதும்
பான்மைதனை யேயறிந்து பாடவுனை வைத்தனரோ
தேன்மதுரச் செந்தமிழைத் தேர்ந்து.

யாக்கைநிலை யிப்படித்தான் என்றேயெமக் குணர்த்தப்
போக்குநிலை காட்டிவிட்டுப் போயினையோ—ஆக்கமிகு
செல்லையாப் பாவலனே தேடுகிறோம் உன்னையெந்த
எல்லையிலே காண்போம் இனி.

—நாடகக் கவிஞர் க. நா. சண்முகநாதன்

---

## " சொல்வாயே எமக்காய்த் தூது "

அல்வாயூர் நாமந் தன்னை
அரங்கினில் அறியச் செய்த
செல்லையா கவிஞன் தம்மைத்
திகழ்ந்திடச் செய்த வண்டே!
சொல்வாயே எமக்காய்த் தூது
சொல்லிமுன் விடுத்தோ னந்தச்
செல்லையா செயம லார்க்குச்
சிவலோகம் சென்று நீயே!

நன்மனை யாளும் மக்கள்
கலிந்துமே வாடு கின்றார்
அன்னையும் பிரிவாற் றாது
அழுதுமே புலம்பு கின்றாள்
முன்னவன் இளையோன் தங்கை
முடிவிலாச் சோகங் கொண்டார்
இன்னிலை தன்னை யாங்கே
எடுத்துநீ இயம்பு வாயே!

தென்னகம் சென்ற மைந்தன்
திரும்பியே ஈழம் வந்து
உன்னகம் நோக்கும் போதே
ஒளியிலா திருக்கக் கண்டான்
தன்னகம் உருகிச் சோர்ந்தே
தாங்கொணாத் துயரை யுற்றான்
இன்னிலை தன்னை யாங்கே
இரக்கமோ டியம்பு வாயே!

பொன்மக ளில்லம் பூத்த
புதையலாம் புலவன் முன்னே
என்கவி மலரைத் தூவி
இணையடி ஏத்திப் போற்றி
உன்மொழி வழியாய் வந்தோர்
உணர்விழந் தாரே என்று
முன்வழி காட்டு மெங்கள்
முதல்வனுக் கோது வாயே!

சிவனுல கிருந்தே எங்கள்
சிந்தனைச் செம்மல் செய்த
கவிமலர்த் தேனை யுண்ட
களிப்பினில் கவலை சொல்லாத்
தவறெதும் செய்தி டாதே,
தவநிதி தம்மை ஓர்கால்
புவிதனில் வரச்சொல் வாயே
புனர்வழி அடைய நாமே!

—அரியாலையூர் வே. ஐயாத்துரை

## அல்வாயூர் கவிஞரே!

## உங்களுக்கு எனது அஞ்சலி!!

* * * * *

நம்மினஞ் செய்த நற்றவம் யாவும்
ஒன்றெனத் திரண்டு ஓருரு வாகி
அல்வாயூரில் அமைதி காண் சூழலில்
முருகரின் மகனாய் குஞ்சரம் வயிற்றில்
இரண்டாம் பிள்ளையாய் இருநிலத் துதித்து
சொல்லிலும் செயலிலும் சைவமே மிளிர்ந்த
சூரன் எனும்பெயர்த் தீரரின் தொடர்பால்
கல்வியி லுயர்ந்து கணக்காய னாகிப்
பயிற்றப் பட்டுப் பண்டித னானாய்!
தேவரை யாளிச் சைவத் தாபனத்
தலைமை ஆசிரியனாய்த் தன்னிகர் சேவையில்
எம்மவர் உயர்வே இதயத் துடிப்பாய்
உடம்பைப் பேணா துறக்கம் நீத்து
சைவமும் தமிழும் சால்புற ஓங்கப்
பவணந்தி காட்டிய பண்புறு கடமையில்
எட்டுணை யேனும் இயல்பு மாறாது-நீ
செய்திடு தொண்டால் சிறந்தனர் பல்லோர்.
அன்றுநீ செய்த அருங்கலை உழைப்பால்
இயலிசை நாடகம் ஆகிய முத்தமிழ்
வித்தகத் திறமையில் விளங்கிடப் பலரை
ஆக்கி அளித்தாய் அருங்கலை விநோதா!
ஈழத்தில் நாற்புறமும் இன்று கடமைசெய்யும்
நம்மினத்து ஆசிரியர் நல்வாழ்வுக் கடியிட்டு
சமூகம் வளர்வதற்குச் சலியா துழைத்துச்
சைவாசிரியனாய்ச் சான்றோர் போற்ற
கற்றோரும் மற்றோரும் சளித்து உறவாட
எண்டிசையும் புகழ்மணக்க இருந்த தமிழ்ஊற்றே!
தெற்கும் வதிரியும் திருந்த வழிகாட்டி
திருப்தி தோன்றாமையால் சென்றாய் வடதிசையே
கால்கடுக்க வெயில்சுடக் கடுகி வழிநடந்து
தேவரையாளிக்குத் தினமும் படிப் பதற்கு
வந்து சிரமமுற்ற வடக்குச் சிறுவர்களின்
சிரமத்தை நீக்கிய "ஸ்ரீலங்கா" தோன்றுதற்கு

முன்னின்று உழைத்து முதல்வனய் அமர்ந்து
யாதுமொன் றறியா என்போன்றோர் காலிக்க
வடக்குவளர வகை செய்த பெரியோனே!
இலங்கை வானெலி இயக்கிய கவிதைப்
போட்டியிற் கலந்து பொற்பதக்கமும் பெற்று
கருவிலே தோன்றிய கவிதா விலாசத்தைப்
பலரும் போற்றப் பண்ணமை கவிஞர்ப்
பட்டமும் கண்டு பலரறிய வாழ்ந்தாய்.
ஆற்றிய தொண்டில் அமைதியே காண
அறுபதில் அன்று ஐப்பசி மாதம்
இளைப்பாறி மீண்டும் எம்மவர்க் காக
சைவ சமய சமரச சங்கம்
ஆக்கி அதனை ஆற்றிடும் பணியில்
குறைவிலா துழைத்த குன்றிடை விளக்கே!
தாயார் தவிக்கத் தமையனர் கலங்கியழ
தம்பியார் கதற தங்கையார் ஓலமிட
கைப்பிடித்த கயல்விழியாள் கண்ணும் குருதிசிந்த
புதல்வர் புரண்டுவிழ பொற்பாவை பாரதியும்
நிலைகலங்கித் தடுமாற நீணிலத்து வாழ்வினின்றும்
மனோவேகம் போலும் மாயமாய் மறைந்தாயே
உன்னுவி மீண்டும் ஒருருவம் தாமெடுத்து
எம்சமூக மத்தியில் இங்கிதமாய் அவதரித்து
விட்டகுறை தொட்டகுறை வேண்டும் பணிசெய்ய
நிச்சயம்நீ தோன்ற நிமலன் அருள்வானே!

வணக்கம்.

— க. கிருஷ்ணபிள்ளை

---

அல்வாயூர்க் கவிஞ ராகி அகிலமே புகழ நின்று
துல்லிய அறிவு ஞானம் துலங்குநற் சிறப்பை யேந்தி
வல்லவை ருளத்தில் நீங்கா வாழ்ந்தவெம் ஜோதி யான
செல்லையாக் கவிஞ ரென்ற தீபமும் அணைந்து போச்சே.

— வதிரி ஆ. க. கதிர்காமவேல்

## அநுதாபமும் அஞ்சலியும்.

* * * * * *

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற

வள்ளுவன் வாக்குக்கு வரவிலக்கணமாக வாழ்ந்து,

தமிழர் சமுதாயத்தின் தலைசிறந்த ஆசிரியனாகி
சமரச சன்மார்க்க நெறிதனில் வாழ்ந்தோனாகி
ஈழத்து எழுத்தாளர்க்குள் எழில்தமிழ் வளவனாகி
வானொலிக் கவிஞனாகி, வல்லசோதிடனாகி
சேவையின் சிகரமாகி சிந்தனையாளனாகி
சாதிகள் இல்லையென்றே சங்கதம் பேருமாடி
வேதியர் தாமும் போற்றும் விதிமுறையுடையோனாகி
சோதியாய்த் திகழ்ந்தவெங்கள் செல்லையா உபாத்தியாரே!

மாணவப் பருவந் தொட்டே மனத்தினி லெங்களூரை
மாரும் புலமதென்றே மகிழ்வுடன் போற்றி வந்தீர்!
ஆதியிற் சைவந்தோன்றி ஆகம விதியும் காக்கும்
ஆஸ்திகர் வாழ்ந்தா ரென்றே அடிக்கடி பேசினீரே
ஆரினிப் பேசவுள்ளார் ஆர்சைவம் பேணவுள்ளார்
அன்பனே ஏகிவிட்டீர் ஆலய மிதை மறந்தோ!

தங்களை இழந்து ஏங்கும் தமருடன் மனைவி மக்கள்
யாவர்க்கும் மெங்க ளாழ்ந்த அநுதாபம் உரியதாக!

கடமையின் உடமையான கண்ணிய வானுமான
கவிஞனை உந்தனாத்மா காணுக சாந்திசாந்தி!
வடமலையேகச்சாந்தி! வையக முழுதுஞ்சாந்தி!
குடமுனியுவப்பச் சாந்தி! கூறினோம் சாந்தி! சாந்தி!

அல்வாய்
12-12-66

இங்ஙனம்
மாரும்புல மக்கள்

# உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் அளித்த காணிக்கை.

நெற்றியிலே மூன்று குறி. நெஞ்சிலே தொண்டு எண்ணம். உடையிலே எளிமை. வாழ்வோ உண்மைச் சைவ வாழ்வு. இவை கவிஞர் செல்லையா அவர்களது தனி முத்திரைகள்.

சைவனாய், காந்திய வாதியாய், கவிஞனாய், சிறப்புற வாழ்ந்து, தான் பிறந்த இனத்தின் முன்னேற்றத்துக்கு மிக்க தொண்டு செய்து மற்றவரிடத்தும் மாண்புடன் பழகி கவிமழையால் தனியொரு தலைவனெனப் புகழடைந்து 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' ஆனார் கவிஞர்.

வாழு முறையால், பல நூற்றாண்டு பின்தங்கியவர்கள் தமிழர் என்றெண்ணும்படியாக நம்முட்சிலர் சிறுபான்மைத் தமிழரை ஆலயத்துட்புக அனுமதியோம் என்கிறார்கள். அனுமதிவழங்க உரிமையுடையோரேனும் இவருள் ஐந்து வீதத்தவர்தானும் ஆலயத்துட் பிரவேசிக்க 'ஆசார' மில்லாதவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும், நந்தனாரை நெருப்பிலே இட்டு உள்ளே விட்ட கூட்டம் இந்த நியாயத்தை உணரவா செய்யும்? உணரத்தான் போகிறது. போக,

அந்தணனை கவிஞர் செல்லையா-ஆம் வள்ளுவர் சொன்னபடி அறவோனாய்ச், செந்தண்மை பூண்டொழுகியவன் அந்தணனுவானால் கவிஞர் அந்தணனே-ஆலயப் பிரவேசத்தில் மிதவாதம் போதும் தீவிரவாதம் மாறுபட்ட பலன் தரும் என்று கருதினார். என்னேடு கலந்துரையாடிய போதெல்லாம் இதை வலியுறுத்தினார். அது நியாயம் என்பது உண்மையே.

சந்தர்ப்பத்தை மீறி, சைவ, காந்திய வாழ்வு வாழ எப்படி முடிந்தது என்பது பலரது ஆச்சரியம். அங்கேதானே சிறப்புமிளிர்கிறது.

கதர் கட்டினார். யாவருடனும் பண்போடு பழகினார். விட்டுக்கொடுத்தல், வேண்டியபோது அடம்பிடித்தும் நல்லதைச் செய்து முடித்தல், நெஞ்சிலிருப்பதை ஒழியாது வெளியிடல் கவிஞர்க்கு இயல்பு.

வண்டு விடு தூது, முதலான அவரது கவிதைகளில் சிறுகதைகளில் புது உத்தியுடன் கருத்துத் திணிக்கப்படும் அதேவேளையில் நகைச்சுவையும் பின்னிப்பிணைந்து நடமாடும். அவரது படைப்புகளை வேறுபாடின்றி எந்த வித எழுத்தாளர்களும், அறிஞர்களும் சுவைத்ததுபோல, அவரது இறுதி யாத்திரையின்போது கருத்துமாறு கொண்ட அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் திரண்டுவந்தமை யார்க்கும் கிடைக்காத அரியபேறு.

இத்தகைய கவிஞர், என் சொந்த வாழ்வில் எனக்கு உறுதுணையாய் நின்ற சிலசந்தர்ப்பங்களை அரசியற் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது பலரறிவர். ஆனால் வேறுபல வழிகளில், அவர் உதவியவை நம்மிருவர்க்குத்தான் தெரியும். உயர்ந்த கருத்தை, சிக்கலைத் தவிர்க்க நல்லவழிகளை - பல சந்தர்ப்பங்களில் எனக்குச் சொல்லியிருக்கிறார்.

கல்கொண்டு கட்டப்பட்ட பூவுலக ஆலயங்கள் தடுத்தமைகண்ட இறைவன் கைலைமலை ஆலயக்கதவைத் திறந்து கவிஞரே வருகவென வரவேற்றுக் கொண்டார். கவிஞர் கண்மூடினார். கலைமகள், தமிழினம், அவர் குடும்பத்தார் வாடினர்.

எனது கண்ணீரைக் காணிக்கையாக்கி ஆன்மா சாந்தி பெறுகவென வாழ்த்தி உலகுள்ள மட்டும் உன் புகழ் மிளிரும் என்று கூறி முடிக்கிறேன்.

மு. சிவசிதம்பரம்

பிரதிநிதிகள் சபை,
கொழும்பு,
30-12-66.

உ

ஓம் முருகா.

# கவிஞர் செல்லையா அவர்களின்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.

* * * * *

*[இன்று நூற்றுக் கணக்கில் ஆசிரியப் பணிபுரிந்து கொண்டிருக்கும் கவிஞரின் மாணவர்களுள், முதன் முதலில் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், சேவைக் காலம் முழுவதும் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றிய கவிஞருக்கு இருபத்து நான்கு ஆண்டுக்காலம் சிரேஷ்ட உதவியாசிரியராக இருந்தவரும், எத்தனையோ பல சங்கங்களை ஸ்தாபித்த கவிஞர் கடைசியாக ஸ்தாபித்த சைவசமய சமரச சங்கத்தின் தலைவர் பதவியை அன்னாரின் வற்புறுத்தல் காரணமாக ஏற்றுக்கொண்டவரும், கவிஞரின் ஆவி பிரியுக்கருணத்திலும் அவர் பக்கத்தே அமர்ந்திருந்து அன்னார் திருமேனியைத் தாங்கிக் கொண்ட வரும் ஆகிய,*

வதிரி, சைவப்புலவர் சி. வல்லிபுரம் ஆசிரியரால்
எழுதப்பட்டது.]

வங்கத் துதித்திட்ட செங்கதிர வன்மானும்
தங்கக் கவிஞன்; தமிழறிஞன்; — பொங்குநகை
தங்குமெழுத் தாளன்; சமரசமோ னச்சைவன்;
எங்கள்முன் னோடி இவன்.

வண்டுவிடு தூதும் வளர்பிறையும் உள்ளளவும்
எண்டிசையும் தன்பேர் இருத்திவிட்ட — பண்டிதற்குச்
செல்லையாப் பேரிருந்தும் செல்லையா என்றெவரும்
சொல்லவில்லை யேசிரிப்பில் தோய்ந்து.

காந்தி வழியிற் கருமம் பலபுரிந்த
சாந்த சொரூபன் தமிழெழுதி — ஏந்துபுகழ்
தங்கு சிறுபான்மைத் தமிழர் குலவிளக்கு
மங்கியதே எம்மை மறந்து.

**தோற்றுவாய்:—**

*இருபத்தாறு ஆண்டுகள் வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலும், பதின்மூன்று ஆண்டுகள் அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலையிலும், தலைமை ஆசி*

ரியராக இருந்து அரும் பெரும் சேவை செய்த கவிஞர் மு. செல்லையா அவர்கள் சென்ற 30-10-66-ல் ஓய்வு பெற்றார்கள். ஓய்வு பெற்றபின்னர் தமக்குரிய ஒருமாத இளைப்பாற்றிச் சம்பளத்தைத்தானும் பெற்றுக்கொள்ள முன்னர், அவரது சேவையால் உயர்நிலை எய்தியுள்ள சிறுபான்மைத் தமிழர்களும், எழுத்துலக மேதைகளும், அரசியற் பிரமுகர்களும் பணிவிமக்களும் கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்கச் சைவசமயத் தொண்டில் ஈடுபட்டுக் கருமமாற்றிக் கொண்டிருக்கையிலேயே சென்ற 9-12-66-ல் மாரடைப்பு காரணமாக அமரரானார்கள்.

## தாய் தந்தையர்:—

அல்வாயிலே தச்சுத்தொழில் புரிந்து வந்தவரும் கவிஞர் சிறுவனாயிருக்கும் போதே இவ்வுலக வாழ்வை நீத்தவருமாகிய வ. முருகர் என்ற பெரியாருக்கும் விடாமுயற்சி, சுறுசுறுப்பு, பேச்சு வன்மை ஆகியன பொருந்தப் பெற்றவரும் பனையோலைப்பொருள் வியாபாரியும் இப்பொழுதும் உயிருடன் இருப்பவருமாகிய குஞ்சரம் என்னும் அம்மையாருக்கும் இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார்.

## முன்னோரின் சமயாபிமானமும் சைவ வித்தியாசாலைத் தோற்றமும்:—

கவிஞர் சிறுவனாயிருந்த காலத்திலே இந்த யாழ்ப்பாணம் முழுவதற்கும் பொதுவில் நான்கைந்து கிறீஸ்த பாடசாலைகளே சிறுபான்மைத் தமிழ்ச் சிறுவர்கள் உரிமையோடு ஓரளவு எழுத்தறிவு பெறவும், கிறீஸ்தவர்களாக மதம்மாறிக்கொண்ட ஒருசில சிறுபான்மைத் தமிழர்களே ஆசிரியர்களாக கடமை புரியவும் வாய்ப்பு அளித்து வந்தன. எங்கள் கவிஞர் மூன்றாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது இந்த யாழ்ப்பாணத்திலே அதற்கு முன் இல்லாததும் அக்கால நிலையிலே சிறுபான்மைத் தமிழர்கள் நடத்துவார்களென எவரும் எதிர்பாராததுமான ஒரு சைவவித்தியாசாலையானது கரவெட்டி வடக்கு, அல்வாய் தெற்கு, அல்வாய் மேற்கு, கொற்றாவத்தை ஆகிய கிராமங்கள் சந்திக்கின்ற ஓரிடத்திலே சைவப்பெரியார் திரு. கா. சூரன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே தேவரையாளிச் சைவவித்தியாசாலை

என்ற பாடசாலையாகும். (இப்பொழுது தேவரையாளி இந்துக் கல்லூரி) இப்பாடசாலையை வளர்க்கச் "சைவ கலைஞான சபை" என்ற ஒரு சபையும் உதயமாயிற்று. அந்தச் சபையிலே வதிரி கா. சூரன், அல்வாய் க. வேலுச் சோதிடர், வதிரி க. வே. சின்னப்பிள்ளைக் கவிஞர், கரவெட்டி வ. சி. சிலம்பு வைத்தியராகிய பெரியோர்கள் முக்கியஸ்தர்களாக இருந்து சேவை செய்தனர். அந்தக்கால வழக்கப்பிரகாரம் பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த சைவ ஆசிரியர்கள் எவருமே இப்பாடசாலையிற் சேவை புரிய முன்வராவிடினும் அச்சமூகத்தைச் சேர்ந்த கிறீஸ்த ஆசிரியர் சிலர் முன்வந்து கற்பித்தாரேனும் அவர்களால் மாணவர்கள் சைவசமய அறிவைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த இக்கட்டான நிலையில் பாடசாலை ஸ்தாபகராகிய திரு. கா. சூரன் அவர்களே சமய போதனைகள் செய்து வந்ததோடு, அங்கு படித்துக்கொண்டிருந்த சிறுவர்களுள் விவேகிகளாகக் காணப்பட்ட ஏழு எட்டுச் சிறுவர்களை ஆசிரியர்களாக்கப் பகிரதப் பிரயத்தனமுஞ் செய்து வந்தார். அவர்களுட் சிலர் இடையிலேயேபடிப்பை நிறுத்திக்கொண்டனர். வேறுசிலர் ஆங்கிலப் படிப்புக்காகச் சிங்களப் பிரதேசங்களுக்குப்போயினர். எஞ்சி நின்றவர் வயதிற் சிறியவராகிய கவிஞர் ஒருவரேயாவர்.

### சிறுபான்மைத் தமிழர் சமூகத்திலே தோன்றிய சைவ சமயத்தவருள் முதன் முதலிற் பயிற்றப்பட்ட ஆசிரியர்:—

கவிஞர் செல்லையா ஏழாம் எட்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே தமிழில் விசேஷ தேர்ச்சி பெறும் பொருட்டு திரு. சூரன் அவர்களால் கரவெட்டி பண்டிதர் திரு. க. மயில்வாகனம் உபாத்தியாயர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். பண்டிதரிடத்திலே நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும் பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள சில இலக்கிய நூல்களையும் சமய அறிவுக்கு அடிப்படையாகத் திருவாசகாதிகள் புராணத்தையும் முறைப்படி பாடங் கேட்டுவந்தார். 1925-ம் ஆ௵ கோப்பாய் ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீக்ஷையிலே தேறி ஆசிரியப்பயிற்சி பெற்றார். அங்கு ஆசிரியப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கப் பிரவேச பரீக்ஷைக்

குத் தோற்றிச் சித்தி பெற்றார். 1927-ம் ஆ. ஆசிரியப் பயிற்சி முடித்துக் கொண்ட கவிஞர் தான் ஆரம்ப முதற் கல்வி கற்ற வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலேயே தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். எங்கள் கவிஞருக்கு முந்தியும் சிறுபான்மைத் தமிழர்களுள் பயிற்றப்பட்ட ஆசிரியர் பலர் வெளிவந்திருந்தாரேனும் அவரெல்லாம் கிறீஸ்தவர்களாகவே இருந்தனர். எந்தவிதமான கருமத்தைச் செய்து முடித்தாலுங்கூட "நான் தான் இதனைச் செய்தேன்" என்று தற்பெருமை பாராட்டிக்கொள்ளாத கவிஞர் இந்த ஒரேயொரு விஷயத்தில் மட்டும் "நான் தான் ஆசிரியப் பயிற்சி பெற்ற முதற் சிறுபான்மைத் தமிழ்ச் சைவன்" என்று தனது மார்பிலே தட்டிக் காட்டிப் பல சந்தர்ப்பங்களிலே எங்கள் முன் சிரித்துக்கொண்டு கூறியுள்ளார். அதில் அவருக்கு ஒரு தனிமகிழ்ச்சி. என்னே அவரின் சைவாபிமானம்!

எங்கள் முன்னோடி:—

ஆசிரியராக நியமிக்கப்பட்டதும் தம்மைப் போலவே இனிவரும் சிறுபான்மைத் தமிழ் ஆசிரியர்களும் சைவர்களாகவே திகழவேண்டும். என்பதற்காகவும் பாடசாலை ஸ்தாபிக்கப் பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் அப்பொழுது மேல்வகுப்புப் படித்துக்கொண்டிருந்த சிலர் மாணவரையும் முன்பு தம்மோடு படித்து விட்டு இடையிலே படிப்பை நிறுத்தியவருட் சிலரையும் ஒன்று கூட்டி இரவுபகலாக ஒருகணமேனும் ஓய்வு ஒழிச்சலின்றிக் கல்விகற்பித்து வந்தார். இதன் விளைவாக ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகப் பலரைத் தம்மைப்போல பயிற்றப்பட்ட சைவ ஆசிரியர்களாகத் தோன்றச் செய்தார். அவர்களுள் இதனை எழுதுகின்ற என்னையும் க. முருகேசு ஆசிரியரையும், ஆ. ம. செல்வத்துரை ஆசிரியரையும் உதவி ஆசிரியராகப் பெற்றுக் கொண்டார். அதுவரை ஓய்வுகிடைககாத அவர் அதன் பின் ஆரிய திராவிடபாஷா விருத்திச் சங்கப் பாலபண்டித தேர்வுக்குத் தோற்றி 1933ம் ஆண்டளவில் அதிலும் சித்தியடைந்தார். அதனை அடுத்து அல்வாயூரில் அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு வாசிகசாலைத் திறப்பு விழாவுக்கு முக்கிய பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கப் பரீட்சகருள் ஒருவராகிய பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்

கவிஞரைப் பார்த்து, "இந்த ஆண்டுப் பரீட்சையிலே செய்யுளியற்றல் பாடம் எடுத்தவர்களுள் நீரே கூடிய புள்ளி பெற்றிருக்கிறீர்" என்று கூறினார்கள். அதன் பின்புதான் அவர் பல புனைப்பெயர்களிலே பத்திரிகைகளுக்குக் கவிதை எழுதத்தொடங்கி மறைந்து கிடந்த தனது கவிதா சக்தியினைப் பலரும் அறியும் வண்ணம் செய்தனர்.

நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கையில் ஆ. தி. பா. வி. சங்கப் பிரவேச பரீட்சையில் சித்தியடைந்திருந்தபடியால் ஆசிரியராகக் கடமை பார்த்துக் கொண்டிருக்கையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் திருநெல்வேலி சைவாசிரிய காலாசாலையிலே நடத்தப்பட்ட பாலபண்டித வகுப்பிலே சேர்ந்து படித்து 1936-ம் ஆண்டில் சித்தியடைந்தேன். அதன்பின் கவிஞர் அவர்களும் நானும் சேர்ந்து பண்டிதமணி அவர்கள் நடத்தி வந்த மதுரைப் பண்டித வகுப்பிலே ஓராண்டுக் காலமும் வித்துவான் க. சுப்பையாபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே நடத்தி வந்த பண்டித வகுப்பிலே ஆறுமாத காலமும் படித்தும் கவிஞருக்கு இடையிடையே ஏற்பட்ட உடல் நலமின்மைகாரணமாக இருவருமே பரீக்ஷை எடுக்க முடியாமற் போய்விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கவிஞர் அவர்களைப் பார்த்து, "உபாத்தியார், நாங்கள் பரீக்ஷைப் பாடவிதானத்தின்படி ஒரு பகுதி பாடங்களை படித்து முடித்துவிட்டோம். இன்னும் சிறு பகுதிதானே படிக்க இருக்கிறது.' ஆனபடியால் எமக்கு அண்மையிலே புலோலியில் கந்த முருகேசனார் என்ற தமிழறிஞர் பண்டித வகுப்பு நடத்துகின்றாராமே அங்கே போய்ப் படிப்போமா?" என்று வினவியபோது அவர், "அறிஞர் கந்த முருகேசனாரை அணுகிப் பாடம் கேட்போமாயின் நிச்சயமாகவே நாமிருவரும் பரீக்ஷையிற் சித்தியடைந்துவிடுவோம் என்பதில் எனக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை. ஆனால் என் சந்தேகமெல்லாம் எங்கள் பொருட்டுச் சைவப் பாடசாலையை ஆக்கிய எமது பெரியோர்களின் நோக்கமாகிய சைவத்தை வளர்த்தல் என்பதிலும் நாம் சித்தியடைவோமா என்பதிலேயேயாகும்." என்று படபடப்போடு கண்ணீர் விட்டுக்கொண்டு கூறிய அவரது வார்த்தைகளின் உட்கருத்தை உணர்ந்து கொண்ட நானும் எனது விருப்பத்தை மாற்றிக்கொண்டேன்.

"சுயா"வும் "அநுசுயா"வும்.—

பேராசிரியர் கல்கி அவர்கள் ஆனந்த விகடன் வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தகாலம். யாழ்ப்பாணத்திலே உள்ள தமிழாசிரியர் ஒவ்வொருவர் கையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆனந்தவிகடன் பிரதி ஒவ்வொன்று இருக்கத் தவறமாட்டாது. அதற்குக் காரணம் அவர் எழுதும் கட்டுரை – சிறுகதை – நிகழ்ச்சி விவரணம் எதுவாயினும் அதன்கண் உயர்தரமான நகைச்சுவை காணப்பட்டு வந்தமையேயாகும். கல்கியைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திலும் சிலர் ஈழகேசரி முதலிய வாரவெளியீடுகளிலே நகைச் சுவைக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினர். அவர்களுள் இருவர் தவிர மற்றவர்கள் எழுதியன எல்லாம ஹாஸ்யம் என்ற பெயர் பெறுமல கையாண்டி என்ற பெயரைப்பெற்று எழுதியவர்களுக்கே கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்தன. அந்த இருவருள் ஒருவர் "சுயா" மற்றவர் "அநுசுயா" இருவரும் தமிழாசிரியர்கள். சுயாவின் கட்டுரைகளுக்கு வாசகர்களுக்கிடையில் இருந்து வந்த செல்வாக்கையும் பாராட்டுதல்களையும் கண்ட பின்னரே "அநுசுயா" தோன்றினவர் என்பதனை அந்த இரு புனை பெயர்களிலுமிருந்தே எவரும் உணரலாம். "சுயா" என்ற புனைபெயர் தென்மராட்சியைச் சேர்ந்த "சு. நல்லையா" என்பவரின் சுருக்கம். (சு..... யா) அநுசுயா என்ற புனைபெயர் வடமராட்சியைச் சேர்ந்த "அலவாயூர் செல்லையா" என்ற பெயரின் சுருக்கம் (அ.......யா) சுயா அவர்கள் உரைநடையிலே மட்டும் ஹாஸ்யத்தை அள்ளி வழங்க அநுசுயா அவர்கள் உரைநடையிலும் கவிதைகளிலும் ஹாஸ்யத்தை அள்ளி வழங்கலாயினர். பிரசித்தி பெற்ற பாடலாகிய "ஈயாய்ப் பிறந்தில னேகள்ளில மூழ்கி இறப்பதற்கே" என்பதனையும் அதன் சந்தர்ப்பத்தையும் கேட்டுணரும் பெருங்குடியர்தாமும் தம்மை மறந்து முதலிற் சிரிக்காமல் இருக்கமுடியாது. அதன் பின்புதான் அது தம்மைக் கிண்டல் செய்யக் கற்பனை செய்யப்பட்டதென்பதனை உணர்வர். உள்ளீட்டை உணர உணர அத்தீப்பழக்கம் அன்னுரை விட்டு நீங்குமல்லவா? கவிஞர் இந்த விதமான ஹாஸ்யப் பாணியிலேயே எதனையும் கூறுகின்ற அரியசக்தியே அவரது கவிதைகளுக்கு ஏற்றத்தைக் கொடுத்துவந்தது. 'வண்டுவிடு தூது' என்ற அவரது சிறுநூல் முழுவதுமே இந்த ஹாஸ்ய ரசத்துக்கு எடுத்துக்காட்டாகவே திகழ்கிறது.

**கவிஞரும் இரசிகமணியும்:—**

ஈழகேசரியிலே கவிஞரின் கட்டுரைகள் பல்வேறு புனைபெயர்களில் வெளிவந்த போதெல்லாம் அவரைப் பாராட்டிய வாசகர்கள் அவரொரு சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று அறிய வந்தபோதுங் கூடத்தங்கள் பாராட்டுதல்களைக் குறைத்தாரல்லர். அதற்குக் காரணமாயிருந்தவர் கரவைக்கவி கந்தப்பனார் என்ற விமர்சன கர்த்தா என்பதனை நான் கூறாமலிருக்க முடியாது. ஒருநாள் பாடசாலை முடிந்தபின்பு நான் வீட்டுக்குச் சென்று அங்கு இருக்கும்போது கவிஞர் ஈழகேசரியும் கையுமாக என் வீட்டுக்கு வந்தார். வந்தவர் ஈழகேசரியை என்பால் நீட்டி, "இதனை வாசியுங்கள்" என்று கூறினார். அதில் அவருடைய இலக்கியப் படைப்புக்களை எழுத்தெழுத்தாக ஆராய்ந்து நயம்பட எழுதப்பட்டிருந்த ஒரு விமர்சனம் காணப்பட்டது. அதனை எழுதியிருந்தவராகிய கரவைக்கவி கந்தப்பனார் யாரென்று இருவருக்கும் புலப்படவில்லை. தான் அப்பொழுதே ஈழகேசரி அனுவலகத்திற்குப் போயிருப்பதாகத் தன் வீட்டாருக்கு அறிவிக்குமாறு எனக்குச் சொல்லிவிட்டு உடனே சுன்னுகத்துக்குச் சென்று விட்டார். அடுத்தநாட்பாடசாலையிலே இருவரும் சந்தித்தபோது கரவைக் கவி கந்தப்பனார் யாரென்பதனை அவர் எனக்குச் சொன்ன விதம் வருமாறு. "கரவைக்கவி கந்தப்பனார் வேறுயாருமல்லர், அவர் எனது சொந்தப்பனார்தான்" என்று புதிர் போட்டுவிட்டுப் புதிரை விடுவித்தார். செந்திநாதர் கந்தப்பர் என்றும் கந்தப்பர் தனது சொந்தப்பராகிய முருகப்பர் என்றும் கூறிச்சிரித்து விட்டு இரசிகமணி கனகசெந்திநாதன்தான் அந்த விமர்சனகர்த்தா என்றும் தனக்கும் அவருக்கும் ஈழகேசரித் தொடர்பில் நீண்டநாட் பழக்கமுண்டென்றும் சொன்னார். அன்றுகொட்டு இன்று வரையும் இரசிகமணி அவர்கள் தமது பேச்சுக்களில் கவிஞரின் பாடல்களின் நயங்களையும் ஹாஸ்யக் கட்டுரைகளின் சிறப்புப்புக்களையும் கூறத் தவறுவதில்லை. ஆளைப்பாராமல் ஆட்டத்தைப் பார்த்து மதிப்பீடு செய்கின்ற அத்தமணியும் அவரது திறனாய்வுக் கலையும் வாழ்க வாழ்க என்று சிறுபான்மைத் தமிழர் சார்பில் வாயார வாழ்த்துகின்றேன்.

சில விசேஷ குறிப்புக்கள்:—

1. பாடசாலை ஆசிரியராக இருந்து கொண்டே அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலையை ஸ்தாபித்தவர்.
2. தனது ஒன்று விட்ட பாட்டனர் க. வேலுச் சோதிடர் அவர் மகன் தம்பையாச் சோதிடர் என்பவர்களை போன்று மிகச் சிறந்த சோதிடராக விளங்கியவர்.
3. வைத்தியம் செய்யா விடினும் நாடி பார்ப்பதில் திறமை படைத்தவர்.
4. சுகாகார சாஸ்திர விஷயங்களை மிக - நுணுக்கமாக ஆராய்ந்து கற்றவர்.
5. தமக்கு நோய்வந்த காலத்தெல்லாம் பற்பல ஸ்தலங்கள் சென்று தோத்திரப் பதிகங்கள் பாடி நோய் நீங்கப் பெற்றவர்.
6. நேரம் போவதே தெரியாதபடி எவருடனும் கலகலப்பாகவும் நகைச் சுவையோடும் சம்பாஷிப்பவர்.
7. எவரையும் எதற்காகவும் வெறுக்காதவர்.
8. சைவ சமய விஷயங்களிலே ஆராதகாதல் கொண்டவர்.
9. சங்கீத ஞானம் படைத்தவர்.
10. சீர்திருத்த நாடகங்களை எழுதிச் சிறுவர்களை நடிக்கச் செய்வதில் அபார திறமை படைத்தவர்.
11. நூற்றுக் கணக்கான கீதங்களின் சாகித்திய கர்த்தா.
12. எந்தக் கவிஞருக்கும் இல்லாத மிகச்சிறந்த நிர்வாக சக்தி படைத்தவர்.
13. தனக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்தவர்.
14. காந்தியத்தில் ஆராத காதல் கொண்டு அதனை எங்கள் சமூக மக்கள் மத்தியில் பரப்பியவர்.
15. யாதும் ஊரே யாவரும் கேளிர் என நடந்து காட்டியவர்.

வாழ்வின் கடைசி நாள்:—

இலட்சியம் தூயதாய் இருப்பதோடு இலட்சியத்தை அடையாக்கையாளும் வழிகள் அதனினும் தூயவாய் இருத்தல் வேண்டும் என்ற மகாத்மா காந்தியின்

அறிவுரைக்கு மாறாக, "ஆலயப் பிரவேசம்" என்ற தூய இலட்சியத்தை அடையச் சில இயக்கத்தினர் கைக்கொண்டிருக்கும் வழிகள் தவறானவை என்று கண்ட எமது கவிஞர் "சைவ சமய சமரச சங்கம்" என ஒரு சங்கத்தை ஸ்தாபித்துத் தாமே அதன் செயலாளராக இருந்து கொண்டு, ஈழநாடு பத்திரிகையிலே உயர்சாதிச் சைவமக்களுக்கு உருக்கமான ஒருவேண்டுகோளை விடுத்திருந்தனர். அந்த வேண்டுகோளிலே குறிப்பிட்டிருந்த ஆலயப் பிரவேச விஷயத்தை ஆராய்வதற்காக 11-12-66-ல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஒரு கூட்டம் நடத்த ஒழுங்குசெய்யப்பட்டு ஏறக்குறைய 100 சைவப் பிரமுகர்களுக்கு அறிவித்தலும் அனுப்பப்பட்டது. அவர்களுள் மிகவும் முக்கியஸ்தர்களான ஒரு பதினைந்து பெரியார்களையாதல் நேரடியாகக் கண்டு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காக, கவிஞரும் நானும் முருகேசு உபாத்தியாரும் செல்லத்துரை ஆசிரியரும் ஒரு காரிலே யாழ்ப்பாணத்தை நோக்கி 9-12-66 வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணியளவில் இங்கிருந்து புறப்பட்டோம். முன்னாள் பெரிய கோட்டு நீதிபதி செ. தனபாலசிங்கம் அவர்களை 5 மணியளவில் முதன் முதலாகச் சந்தித்து நாங்கள் சென்ற நோக்கத்தை அவர்களுக்குக்கூறி அரை மணி நேரம் வரை அவர்களோடு பேசிக்கொண்டிருந்து விட்டு இன்னொரு சைவப் பிரமுகரைக் காணப் போவதற்காகக் காரிலேறினோம். அப்பொழுது கவிஞர் தமது நெஞ்சிலே கையைவைத்துக்கொண்டு வலிக்கிறதாகக் கூறினார். டாக்டர் சோமசுந்தரம் அவர்களுடைய வைத்தியசாலையைக் கார் அணுகியதுபோது கவிஞருக்கு மூச்சு வாங்கத் தொடங்கி விட்டது. எனது வலத்தோள் மீது சரிந்து விட்டார். உடனே செல்லத்துரை உபாத்தியாயர் அவரை அணைத்துக்கொள்ள முருகேசு உபாத்தியாயர் இறங்கி டாக்டரைக் கூட்டி வந்து காட்டினார். டாக்டர் கைநாடியைப் பரிசோதித்துக் கொண்டிருக்கையில் கடைசி மூச்சை விட்டார். டாக்டர் "இடமில்லை மாரடைப்பு" என்று கூறியதுதான் நாங்கள் செய்வதறியாது திகைப்புற்றிருக்கையில் கார்,

"நல்லூருக்குப் போவதென்றால்
நாற்பது நிமிஷம் போதும்" என்று அவர்

ஒரு சந்தர்ப்பத்திலே காரைப்பற்றிப் பாடியுள்ள ஒருகவிதையின்படி அல்வாயை வந்து சேர்ந்தது.

முடிப்புரை: —

கவிஞரின் எந்த இலக்கியப் படைப்பையும் கையெழுத்துப் பிரதியில் அவருக்கும் முந்தி வாசித்து ரசிப்பவன் இசுனை எழுதும் நான்தான். அதற்குக் காரணம் அதிவேகமாகச் சென்றுகொண்டிருக்கும் அவரது கருத்தோட்டங்களுக்கு வாதநோயாற் பீடிக்கப்பட்டிருந்த அவரது கையும் கையெழுத்தும் இடந்தருவதில்லை. அதனால் அவர் இலககியப் படைப்புக்கள் முழுவதையும் இருவரும் ஒரே பாடசாலையிற் படிப்பித்துக் கொண்டிருந்தகாலத்தில் எழுதும் பாக்கியம் பெற்றது எனது கையேயாகும். அதனாலேதான் அவர் ''மெய்யும் பொய்யாகி விழுகின்ற போது'' அந்த எனது வலக்கரத்தையே தழுவிக்கொண்டு அமரத்துவம் எய்தினர் போலும்.

அவதார புருஷர்களைப் போன்று வந்த காரியமாகிய படிப்பித்தலை ஏறக்குறைய நாற்பது நல்லாண்டுகள் செய்து முடித்ததும் மறைந்து அவர்நெஞ்சிற் குடிகொண்டிருக்கும் முருகப் பெருமானது திருவடிகளில் இரண்டறக் கலந்து அமைதி பெற்றுவிட்டார்.

சாந்தி -- சாந்தி — சாந்தி.

---

வானொலி தன்னில் அன்றோர் வண்டினை தூது விட்டாய்
தானொளி செய்யு நல்ல தருவளர் பிறையும் வைத்தாய்
ஊனொடு உறவாய் வாழும் உயிர்ரத்தம் ஈயச் செய்தாய்
வானொடு புகழை வைக்க வகுத்தவுன் கவிகள் போதும்:

—வதிரி க. வே. கதிர்காமவேல்

சைவத் தமிழ்மணக்கும் சாறுபிழி தேன்கவிதை
தெய்வ ஒளிபரவும் தெவிட்டா நகைப் பேச்சு
உய்யும் அறிவொளிரும் உயர்சிந்தனை வளர்த்த
அய்யா அருள்வழியும் அன்புநிறை வாயெங்கே.

கவிஞரின் மாணவர்

—மட்டுவில் சி. சின்னத்தம்பி ஆசிரியர்

# சைவ நற் சமூக சோதி.

'மரை இலைபோல மாய்ந்திசினோர் பலரே'
'பெருமையும் சிறுமையும் தான்தரவருமே'

கவிஞர் – அமரர் – செல்லையா அவர்களைப்பற்றி நினைக்கும்போது மேற்குறித்த ஆன்றோர் வாக்கியங்கள் அகத்திடை எழுகின்றன. அவர் மரை இலைபோல மாய்ந்தொழியாது, மரைமலர் போல நறுமணம் வீசி நின்று என்றும் நம்மவர் மனத்திடையே உலவுவார். எவரும் அவருக்குக் கொடுக்காமல் அவரைப் பெருமை வந்தடைந்தது. அவருடைய நற்பண்பு அவரை அரிய ஒரு பொருளாக்கி எல்லோருக்கும் உரிய பொதுப்பொருளாக்கி விட்டது. அவர் அமரரானபோது வந்துகுழுமிய பலமத சாகிய மக்கள், அவர் எவ்வளவு தூரம் மக்கள் உள்ளத்திடை இடம்பெற்றுள்ளார் என்பதற்குச்சான்று பகர்வர். தமது கடமைகளை நன்கு செய்து முடித்து ஒய்ந்து கிடந்த அவர் உடலில் கலையாய அங்கத்தில் நீண்டு வளைந்து தோற்றந்தந்த அவர்மூக்கு அவர் இயற்கைக் கவிஞன் என்பதனை நம்மவருக்கு நினைவூட்டிற்று. அவர் அருமை நா, இனிமேற் பாடமுடியாதே, கை எழுதமுடியாதே என எண்ணிய போதெல்லாம் மனத்தில் நெருப்புச் சுடுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

அமரர் செல்லையா மதந்துறத்தல் என்றதனை என்றுமே நினைத்திலர். சைவத்திலே பிறந்து அதனிடம் பெருமதிப்புவைத்து, நால்வர் பெருமக்களையும் தெய்வமாகக் கண்டு இறுதி மூச்சுவரை சுத்த சைவனாகவே வாழ்ந்தார். சலுகைகளையும் சுகங்களையும் பெற அவர் மதத்தைத் துறப்பதற்குப் பதிலாக, அதனிடம் இறுகப் பற்றுக் கொண்டார். சான்றோர் போற்றும் அவர்கண்ட சைவசமரச நெறியுயர் மக்களெனப்படுவோர் உளங்களைத் துறப்பதற்கும் அவர் சாகித்தியத்தாருக்கு உய்நெறி காட்டுவதற்கும் ஏற்றவழி காட்டியாகும்.

சைவத்தை வளர்க்க அவர் கையாண்ட முறைகள், உயர்ந்தோர் எனத்தம்மைக் கூறிக் கொள்வோரைத்தலைகுனியச் செய்யும். திருவெம்பாவைத் தினமொன்றில அவர் கல்விச்சாலைக்குப் பலவருடங்களுக்கு

முன் சென்ற போது, அச்சாலையில் ஒருபால் இலங்கிய தெய்வ வழிபாட்டிடத்தைக் காட்டி, அதன்வெளிமண்டபத்துள் மாத்திரம் நிற்றற்குரிய மாணவர், உள்ளே பிரவேசத்திற்குரிய தகுதிவாய்ந்த மாணவர் உளரென்றும், முன்னைய மாணவரிற் பலர் இப்போது உட்பிரவேசத்தைப் பெற்று வருகிறாரென்றும் கூறினர். புலாலுண்ணாத வருக்குத்தான் தாம் உட்பிரவேசம் கொடுத்திருப்பதாக அவர்கூறிய போது என் உளம் நைந்து பாகாக உருகிற்று. என்முன்னே ஒரு உயரிய பண்புள்ள சைவன் நிற்பதை நானுணர்ந்தேன். ஆண்டவனே தாமுயர்ந்தவரெனக் கூறுவோருள் கட்குடியும் புலாலுணவுமுள்ளோருக்கு நம் சமூகம் கோவிலுட்புகத் தடை செய்யாமல் விட்டிருக்க புலாலாதிய துறந்த இத்தகையோருக்கு இடமளிக்கும் காலம் அண்மையில் உளதாமோ? இது என்னுளத்தை ஊக்கி ஆண்டவனை நோக்கி இப்படி முறையீடு செய்யச் செய்தது.

விவேகானந்த சபைப் பரீட்சை அன்று நடந்தது. அவர் சமூகத்தவரிலே அதிகம் வயது வந்தோரும் பரீட்சைக்கு எழுதினர். சைவசமயத்தைப்பற்றி அறிய ஏற்பட்ட ஆவல் பலதொழில்களிலுமீடுபட்ட அவர்களை, வயதைப் பற்றி எண்ணச் செய்யாது பரீட்சைக்கு எழுதச் செய்தது. பரீட்சை முடிந்த பின்னும் அவர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறாது எதனையோ எதிர்பார்ப்பவர் போல் நின்றனர். ஈற்றில் மகான் விவேகாநந்தரைப் பற்றி அறியத் தமக்குப் பெரிதும் ஆவல் எனக் கூறினர். நம்மவருள் எத்தனை பேருக்கு அத்தகைய ஆவலுண்டென ஆண்டவனே அறிவான். அந்த மகானைப் பற்றியும், அப்பரீட்சை நடாத்தும் அன்பர்களைப் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாடினேன். ஈற்றில் அவர்கள் உளங்கசிந்து தந்த தேனைவென்ற தெங்கிள நீரின் சுவையையும், அவர்கள் அன்புச் சுவையுடன் மாந்திய நினைவு இன்றும் என்னுளத்திடை பசுமையாகப் பதிந்துதானுளது.

விரல் விட்டு எண்ணக்கூடிய ஆசிரியருதவியுடன் அந்த நாட்களிலே நம் கவிஞர் இத்துணை சைவ வளர்ச்சிக்கு உறுதியானவை செய்தார். வெளியுதவியோ வேறு எந்தத் துணையோ இன்றி இப்படிச் சைவப் பேரன்பினாலே அவர் செய்தவற்றை நினைக்கும்போது இவ்வழி

காட்டியை ஒருபெரும் சமூகசோதி என்றே கூறுதல் வேண்டும். அவர் ஆராமையோடு கற்பித்தமையால் இலைமறை காயினும் குறைவாக இருந்த பலர் இன்று சமூகத்தில் நல்லாசிரியராகத் துலங்குகின்றனர். கவிஞரவர்கள் தமது கல்வி அறிவின் துணைகொண்டு வேறெந்த அரசகருமத்திற்கும் தம்மைக் கொடுத்துவிடாது ஆசிரியப்பணிக்கே தம்மை அர்ப்பணித்தமையால் தாம்தனி நின்றே நல்ல பணிகளாற்றிப் புகழும்பெற்றுள்ளார். அவர் ஆத்மா இறை திருவடியில் எல்லையில் சாந்தியடைக.

—பண்டிதர். பொன் கிருஷ்ணபிள்ளை
(முன்னாள் தமிழ்விரிவுரையாளர்,
பலாலி அரசினர் பயிற்சிக் கலாசாலை)

---

# எங்கள் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது.

* * * * * *

—கவிஞரின் முதல் மாணவரும், சமூக-சமயத் துறைகளில் அவருடன் இணைபிரியாது தொண்டாற்றியவரும், இறுதி நேரத்திலும் அவரைப் பிரியாது அவரின் கடைசி ஆசைகளை நிறைவேற்றத் துணை புரிந்தவரும், உயிர் பிரிந்த பின்னரும் உடலைத் தனது மடியிற் கிடத்தித் தனது குருநாதருக்குச் செய்யவேண்டிய இறுதி மரியாதையைச் செலுத்திய வருமாகிய,

**ஆ. ம. செல்லத்துரை ஆசிரியர்**
தந்த காணிக்கை —

நினைக்க நெஞ்சம் திடுக்கிடுகிறது. பேசநா அடைக்கிறது. எங்கள் சமூகத்தின் ஒளிவிளக்கு அணைந்து விட்டது. ஆசிரிய உலகம் ஒரு ஆசிரிய மணியை இழந்துவிட்டது. தமிழ்த்தாய் ஓர் உயர்தர கவிஞனை இழந்து விட்டாள். எழுத்தாளர் வட்டம் ஒருசிறந்த இலட்சிய எழுத்தாளனை இழந்து விட்டது. பிரசங்க மேடை நகைச் சுவை பொழியும் ஒருநாவலனை இழந்து விட்டது. சோதிடக்கலை மதிப்பிற்குரிய ஒருசோதிட சாஸ்திரியை இழந்து

விட்டது. அல்வாயூர் தான்பெற்ற செல்வத்தை இழந்து விட்டது. சிறுபான்மைத் தமிழர் சமூகம் சிறந்த வழி காட்டியை இழந்து விட்டது.

தூய வெண்கதராடை, நெற்றியிலே திரிபுண்டரம், அதனை எடுப்பாகக் காட்டும் சந்தனத் திலகம். கண்டாரைப் பணியவைக்கும் கவின் பெறும் ஒளி படைத்த வதனம். அதிலே வட்டமிடும் மூக்கண்ணாடி. கேட்டார்ப் பிணிக்கும் தகைய இனியசொல். பேச்சிலே தமிழ். மூச்சிலே சைவம். இத்தனைக்கும் உரியமேதை பிடிசாம்பராகி விட்டார்.

அவர் எமது சமூகத்திலே பயிற்றப்பட்ட முதல வது சைவ ஆசிரியர். ஓயாதுழைத்து எங்களில் நூற்றுக்கு மேம்பட்டோரை ஆசிரியர் ஆக்கினர். சர்வகலாசாலைப் பட்டதாரிகள் பலர் தோன்றுவதற்குத் துணைபுரிந்தார். அவரது பேச்சும், கதைகளும், கட்டுரைகளும், கவிகளும், கீர்த்தனைகளும் எங்கள் சமூகத்திற்கு அழியாப் புகழைத்தேடித் தந்தன. இருபதாம் வயதில் ஆசிரியரானர். அறுபதாம் வயதில் ஆசிரியப்பணி முடிந்தவுடன் அமரராகி விட்டார். கடவுள் அவரை ஆசிரியப்பணிக் கென்றே தந்துவிட்டு, அப்பணி முடிந்தவுடன் அழைத்துக்கொண்டார் போலும்.

தீண்டாமை என்பது தமிழரின் ஒரு அநாகரீகச் சின்னம் என்பது அவர் கருத்து. அதனை ஒழிப்பதற்கு ஈழகேசரியிலே கிண்டற் கவிதைகளும், கட்டுரைகளும் தீட்டினர். அந்தக்காலத்திலே அவை தமிழர் மத்தியிலே பெருஞ்சலசலப்பை உண்டாக்கிற்று. தீண்டாமைக் கொள்கை சைவத்திற்கு உடன்பாடல்ல என்பதை நிரூபிக்கச் சைவஹறிஜன மகாசபையைத் தோற்றுவித்தார். இந்தியாவிலிந்து திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம் அவர்களை அழைப்பித்தார். யாழ்மாநகரசபை மண்டபத்தில் மாபெரும் கூட்டம் நடத்தினர். சைவக்காவலர் த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினர்கள். "தீண்டாமை சைவத்தை ஒழிப்பதற்காகப் புகுத்தப்பட்ட நஞ்சு" என்று திருவாசமணி கருத்துத் தெரிவித்தார். அதேமேடையில் யாழ்ப்பாணத்தின் சைவப்பெருமக்கள் பலர் இக்கருத்தை ஆதரித்துப் பேசினர். அன்றைய நாள்தான் தீண்டாமைக்குச் சாவுமணி யடிக்கப்பட்ட திருநாள்.

இதன் விளைவாகவே நல்லூர்க்கந்தசாமி கோயில், வண்ணை வரதராஜப்பெருமாள் கோயில், வண்ணைச் சிவன்கோயில் ஆகியன ஒரேகாலில் திறக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துப் பலகோயில்கள் திறக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு கோயில்களிலும் கவிஞரும், சைவப்புலவரும் பாடிய பாடல்கள் பிரசித்தமானவை.

கவிஞர் இளைப்பாறி விட்டார் என்பதனை அறிந்தார்கள் யாழ்ப்பாண நண்பர்கள். கணபதிநாதன், குணரத்தினம், அன்ரனி என்போர் வந்தார்கள், கண்டார்கள் கவிஞரையும் புலவரையும், "அரசியல் ஆதாயம் பெறுவோரின் கையில் அகப்பட்டு எங்கள் சமூகத்தின் விடுதலை இன்னும் நூறுவருஷம் பின்னேபோகப்போகிறது. நீங்கள் இருவரும்தான் இனி வழிகாட்டவேண்டும்" என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்கள். "சமூக ஸ்தாபனத்திலும் பார்க்கச் சமய ஸ்தாபனந்தான் இன்றைய சூழ்நிலையில் அவசியம்" என்று கவிஞர் கருத்துத் தெரிவித்தார். யாவரும் ஒப்புக்கொண்டனர். அதன் விளைவுதான் "சைவ சமய சமரச சங்கம்".

சைவ சமய சமரச சங்கச் சார்பிலே சைவப்பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கவிஞரின் கடைசி வேண்டுகோள் அது. அதனை ஆதரித்துப் பலசைவப் பெருமக்கள் கடிதம் எழுதினார்கள். பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டின. இந்த நல்ல சூழ்நிலையைப்பயன் படுத்தக் கருதிய கவிஞர், சைவக்காவலர் முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் சைவப் பெரியார்களை அழைத்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 11-12-66-ல் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்குரிய சகல ஒழுங்குகளையும் செய்து முடித்தார்.

9-12-66 பிற்பகல் நாலு மணி சைவப் பெரியார்களைக் காண்பதற்காகக் கவிஞரும், புலவரும், முருகேசு ஆசிரியரும், நானும் புறப்பட்டுச் சென்றோம். முதலில் நல்லூரில் உயர்திரு. தனபாலசிங்கம் அவர்களைச் சந்தித்தோம். "அரசாங்க அதிபர் மூலம் ஆலயப் பிரவேசத்திற்கு ஆவன செய்ய உத்தேசித்துள்ளோம்" என்றார் தனபாலசிங்கம். "அன்னிய அதிகாரி ஒருவர் எங்கள் சமய விஷயத்தில் தலையிடுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?

சைவப்பெருமக்களுக்கு இது அபகீர்த்தியைத் தாராதா? உங்களைப் போன்ற சைவப்பெருமக்கள் சிலர் தலையிட்டுத் தீர்க்க முடியாத காரியமா இது?" என்று கேட்டார் கவிஞர். அப்பெரியார் உண்மையில் திகைத்துவிட்டார். "நாளையின்று கூடுகிறோம்தானே; அன்று ஒரு முடிவுக்கு வருவோம்" என்றார் அப்பெரியார்.

சைவ சமய சமரச சங்கம் உருவாவதற்குத் தூண்டுகோலாக இருந்த கணபதிநாதனையும் அன்ரனியையும் சந்திக்க விரும்பினர் கவிஞர். அன்ரனி அவர்கள் இல்லத்திற் குதூகலமான சந்திப்பு. கலகலப்பான பேச்சு. உடனடியாக ஒரு கோயிலாவது திறக்கப்பட வேண்டுமென்று கேட்டார் அன்ரனி. "ஒரு கோவிலா? ஒன்பது கோயில் திறக்கிறோம்; இருந்து பாரும்" என்று ஆணி அடித்தாற்போல் அறைந்தார் கவிஞர். கோயில்கள் யாவும் திறந்தது போன்ற உணர்ச்சி எங்கள் யாவர்க்கும்.

அந்தோ! பேனு நகர மறுக்கிறது கவிஞரும் புலவரும் காரில் ஏறினார்கள். நானும் முருகேசு ஆசிரியரும் பக்கவில் நின்றோம். 'ஐயோ' என்றார் கவிஞர் புலவரின் மடியில் விழுந்தார். மாரடைப்பு என்ற சாட்டில் கவிஞர் உயிரைக் கவர்ந்து விட்டான் காலன். நாங்கள் மரமானோம். எப்படிக் கவிஞர் இல்லம் வந்தோம் என்பது எமக்குத் தெரியாது. இன்றும் திகைப்பு மாறினபாடில்லை.

இப்போது கவிஞரின் இடத்தை நிரப்புதவற்கு நம்மிடம் எவருமில்லை. அந்த இடம் வெற்றிடம்தான்.

---

சத்திவேல் சித்திவேல் தற்சரணம் புக்கார்க்கு
முத்திவேல் ஞான முழுமுதல்வேல்—பக்திசெயும்
அன்பர்க் கபயவேல் ஆளுங் கதிரைமலை
இன்பவேல் கந்தரின்கை வேல்.

அடித் தொழுவேல் அரோகரா என்றுதொண்டர்
கூடித் தொழுவேல் குமரவேல்—பாடி
உருகுநரை ஓம்பும்வேல் ஒண் கதிரைக் கோயில்
முருகுவேல் என்றே மொழி.

—கவிஞர்

# வளர்பிறை மறைந்து விட்டது.

* * * * * *

ஈழத்து இலக்கிய வானிலே 'வளர் பிறையாகத் தோன்றிப் பூரண சந்திரனைக ஒளிவீசிய கவிஞர் மு. செல்லையா அவர்கள் மறைந்து விட்டாரென அன்பர்கள் வீட்டுக்கு வந்து சொல்லியும் என்னால் நம்ப முடியவில்லை. சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற கதை அரங்கத்தில் கூடக் கலந்து கொண்டு என் முன்னால் புன்முறுவல் பூக்க வீற்றிருந்தாரே. இரண்டொரு நாளைக்கு முன்கூட அவர் தான் கூட்டப் போகும் "சமரச சங்கம்" பற்றிய அறிக்கையை அனுப்பி எங்கள் ஆதரவைக்கேட்டிருந்தாரே. அவர் இன்று இல்லையா? ......... என்ன உலகமிது இந்த உலகத்துக்கு 'நெருநல் உள்ள ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை' இருக்கிறதெனத் தெய்வப் புலவர் அருமையான நற்சாட்சிப்பத்திரம் அளித்தது தகும்.

அல்வாய்க் கவிஞர் மு. செல்லையா அவர்கள் 1938-ம் ஆண்டு முன்பிருந்தே தன் எழுத்துத்துறையை ஆரம்பித்து விட்டார்.

கற்பனைச் செறிவும், தெய்வ பக்தியும், தேசபக்தியும், காந்தீய ஆர்வமும் கொண்ட அவரது கவிதைகள் 'வளர்பிறை' என்னும் கவிதைத் தொகுதியாக 20-8-52ல் வெளிவந்துள்ளது. 24-9-53-ல் வெளிவந்துள்ளது. 24-9-58ல் வளர்பிறை என்ற அந்நூல் உயர் திரு நவநீத கிருஷ்ண பாரதியார் தலைமையில் அரங்கேற்றப்பட்டு, செல்லையா அவர்கள் 'கவிஞர்' பட்டமும் பெற்றார்கள்.

"வட்டத்தோசை சுட்டதுபோல்,
வானில் இருந்த சந்திரனை
தட்டச் சிறுவன் யாருடைத்தான்
சொல்வாய் உண்மை தோன்றிடவே"

எனக்கேட்டும் சிறுவனை அழகாகப் படைத்து, தான் ஒரு உண்மையான குழந்தைக் கவிஞர் என்பதையும் கவிஞர் செல்லையா நிரூபித்துள்ளார்.

அவருடைய நகைச்சுவை சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் இழிவுகளை லேசாக நையாண்டிபண்ணும் போக்கில் அமைந்துள்ளது.

'புதிய வண்டுவிடு தூது' என்ற கவிதை கவிஞர் அவர்களுக்கு 'இலங்கை வானொலி கவிதைப்' பரிசை வாங்கிக் கொடுத்தது. சென்னையில் படிக்கும் ஒருவன் வெள்ளவத்தையில் உள்ள தன் காதலியிடம் வண்டைத் தூதாக விட்டதாக கவிஞர் பாடுகிறார். தன் காதலியின் கூந்தல் அழகை வண்டினிடம் காதலன் கூறுகிறான். இப்போதைய நவநாகரிக மங்கையரின் தலையலங்காரத்தைக் கவிஞர் அருமையாக நையாண்டி செய்கிறார்:—

"சுளகை முறுக்கைச் சும்மாடு தன்னைத் துடப்பமதை
பழகும் இடியப்பத் தட்டை திகர்க்கப் பலவிதமாய்
அழகுபெறக் கொண்டை யமைத்தே யவைதிற மல்ல [வென்று
குழறு கொண்டையைக் கத்தரித்தாள் தலைக்கோல [மிதே"

பாடல்களைவிட அவர் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகளும் நம் மனதைவிட்டு நீங்காத நிலைபெறக் கூடியவையே. "என்னுடைய வியாசக் கடதாசிகளுக்கு மார்க் போட்ட பழக்கத்தினாலே எனது உபாத்தியாயர் கரும்பலகையிலே 'கொம்பாஸ்' இல்லாமல் பரிபூரண வட்டம் போடப் பழகிக்கொண்டார்" என்பது அவர் நகைச்சுவைக் கட்டுரையின் ஒரு துணுக்கு. ஆனால் இவற்றிலும் பார்க்க அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தில்பிறந்து தமதுஒழுக்கத்தினாலும், மது மாமிசம் புசியாத தன்மையினாலும், மிகப்பெருமை தேடிக்கொண்டவர். சைவக்கோவில்களைக் ஹரிஜனமக்களுக்கு திறந்துவிடத் தடையேன் எனச் சைவசமய ஒழுகக சீலராகிய செல்லையா கேட்பதில் உண்மை இருந்தது; உரிமை இருந்தது. இனி அவர் இடத்தை யார் நிரப்பப்போகிறார்கள்...... அதுதான் இப்போதைய வினா.

— கனக. செந்திநாதன் (ஈழநாடு 12-12-66)

---

# பிரமுகர்கள் விடுத்த அனுதாபச் செய்திகள்.

...கவிஞர் செல்லையா மறைந்த துக்கச்செய்தி எட்டியதும் அதிக மனவருத்தமடைகின்றேன். வாலிபர் மகாநாடு காலந்துவக்கம் காந்தியடிகளைப் பின்பற்றும் நாமிருவரும் நண்பர்களாக விருந்தோம். கடைசி ஒருவாரத்திற்குமுன் ஒரு நிர்வாகக்குழுவிற் சந்தித்தேன் யாழ்நகர மண்டபத்தில், பார்வையிலும், பேச்சிலும், கருத்திலும் எவ்வளவு சிறப்பாகவிருந்தாரென்று கண்காணித்தேன். எனக்கு அத்தருணம் தாம் வெளியிட்ட ஒருபிரதி கையில் வைத்தார். வீடு கொண்டுபோய் வாசித்து, எவ்வளவு உயர்ந்த முறையில் எழுதியிருக்கிறாரென்று சிந்தித்தேன். அவர் கடைசி வாக்கு அது என்று இப்போ கருதுகின்றேன்! அன்பு வாக்கு!

தமிழ்ச்சமூகம் முழுவதிற்கும் பணிபுரிந்து பிரிந்தார் யாமும் அவருக்கு எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.

அவர் சகோதர ஊழியன்

— கு. நேசையா

தலைவர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

* * * * * *

...மிகச் சமீபகாலத்தில் சத்தியாக்கிரகம் சம்பந்தமாக ஈழநாட்டில் அவர் எழுதியதை வாசித்து அவருடைய புத்திமதியை மற்றவர்கள் கேட்டு நடந்தாலோ என்று பெரிதும் விரும்பினேன். எவ்விஷயத்திலும் அவர் பேசுவதும், எழுதுவதும் நியாயமானதும் எவ்வளவோ ஆழ்ந்த கருத்துடையதாகவுமே விளங்கிவந்தது.

ஆண்டு, முடியப்போகிறது. இனி அஞ்சவேண்டியதில்லை என்று பலர் மனம் ஆறியிருக்கும் சமயத்தில் கவிஞரையும் களவாடிக்கொண்டு சென்றுவிட்டது.

அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

— வே. த. சி. சிவகுருநாதன்

"இலட்சுமி வாசா" பருத்தித்துறை.

...கவிஞர், பண்டிதர் செல்லையாவின் சடுதியான மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன். அவருடைய மறைவு சைவ சமுதாயத்திற்கும், கல்வி உலகிற்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

— முருகேசம்பிள்ளை
காரியதிகாரி, வலிகாமம் மேற்கு.

* * * * * *

...திடீர் மரணச் செய்தி அறிந்து வருந்துகிறோம் சென்ற நாற்பதாண்டுகளாய் எமது பிள்ளைகளுள் ஒருவராய் எம்முடன் கலந்து உறவாடி உடனிருந்துண்டு களித்த உத்தமன் காலமான எனதருமைக் கணவனார் நா. பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணத்தில் வெளிவரப்பெற்ற தேசாபிமானி யென்னும் வெளியீடு நடைபெறும் நாட்களில் பண்டிதர் செல்லையா அவர்கள் எனது கணவரோடு நெருங்கிய நண்பருளொருவராய் விளங்கலானார். தீண்டாமை எதிர்ப்புக்கூட்டங்கள் முதன் முறையாய் எனது கணவனாரால் யாழ்ப்பாணத்திற் கூட்டப்படுவதும், பத்திரிகைகளில் எழுதி விளாசப்படுவதுமாயிருந்த அந்நாளிற்றான் திரு செல்லையா அவர்கள் நட்புரிமைக் குரியவராய் விளங்கினதுமல்லாது பலகட்டுரைகளும் வெளிவரச் செய்தார்கள். கல்வி, அறிவு, ஒழுக்கங் களிற் சிறப்புற்று விளங்கிய இச்சைவப் பெருமகனாரின் பிரிவானது சைவஉலகு, கல்வியுலகு, சமூகமாகியவற்றின் பேரிழப்பாகும்.

வாய்மையே தாய்மையாகக் கொண்ட பாக்யவான்.

— மங்களம்மாள் மாசிலாமணிப்பிள்ளை
ஆசிரியை "தமிழ் மகள்" யாழ்ப்பாணம்.

* * * * *

...கவிஞர் மு. செல்லையா காலமாகிவிட்டார் என்ற செய்தி, தமிழிலக்கியத்தின்மீது அன்புகொண்டவர்களை யெல்லாம் அதிர்ச்சிகருள்ளாக்கி விட்டது. அவர் செய்துள்ளசேவைகள் அளப்பரியன. காலத்தால்—ஞாலத்தால் அழியாதன. ஈழத்தமிழுலகம் சிறந்த கவிஞனை—

சைவப்பெரியாரை—சமூகத்தொண்டனை—காந்திய வாதியை இழந்துவிட்டது.

அவர் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

— நா. சண்முகநாதன் (யாழ்வாணன்)
செயலாளர், யாழ் இலக்கிய வட்டம்.

* * * * * *

...நற்குணமும் நல்லறிவும் சைவசமய நெறிநின்ற ஆசார சீலமும் உள்ள ஒரு உத்தமர் எம் கவிஞர் செல்லையா அவர்கள். அவரின் திடீர்மறைவு தமிழ்மக்கள் பலரையும் பெருந்துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. தம் இனத்தவர் படுஞ்சிறுமைகளைச் சகிக்கலாற்ருது அவற்றைச் சைவசமயவழியில் அகற்றப் பல இடங்களுக்குஞ்சென்று பல பெரியார்களையுங் கண்டு அவர் செய்த முயற்சிகள் பல. அவற்றின் பயனைய் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் ஆலோசனைக்கூட்டம் வைப்பதற்கு ஒழுங்குசெய்து நடைபெற இருந்த முதல்நாளே அவர் விண்ணெய்தியது வள்ளுவர் கூறியதுபோல்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் பட்டா ரென்று கொள்ளத் தக்கதாகின்றது.

வட இலங்கைச் சைவசமய சமரசசங்கக் காரியதரிசியாய் அவர் தொடங்கிய பணி இனிது நிறைவேறுவதாக.

— மு. வயிரவப்பிள்ளை
கொழும்பு விவேகானந்த சபைத் தலைவர்.

* * * * *

...கவியுலகம் வல்ல கவிஞனை இழந்து தவிக்கிறது. மாணவ உலகம் மதிப்புக்குரிய ஆசிரியனை இழந்து வாடுகின்றது. தமிழுலகம் தானபெற்ற தமிழ்ச் செல்வத்தை இழந்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறது. அறிஞருலகம் அளப்பரிய அறிஞனை இழந்து அழுகின்றது. சைவ உலகம் சைவச் செம்மலைச் செல்லவிட்டுச் செய்வதறியாது திகைக்கின்றது.

எல்லோருக்கும் எல்லாமாய் இருந்து அறிவுரை பகன்ற கவிஞர் இறைவனடி எய்திவிட்டார். அவரின் இழப்புத் தமிழுலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத தொன்றாகும். எல்லோருடன் எமது மன்றமும் மறைந்த கலைஞனுக்கு அஞ்சலி செலுத்துகின்றது. அவரைப் பிரிந்து வாடும் அனைவர்க்கும் எமது மன்றத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— வே. செ. குஞ்சிதபாதம்
கௌரவ செயலாளர், யாழ் நாடகக் கலாமன்றம்.

* * * * *

...சிறுபான்மைத் தமிழர் சமூகத்திற்கும், சைவத்திற்கும், தமிழுக்கும் பலகாலமாக அரும்பெரும் தொண்டுகளாற்றி வந்தவராகிய அல்வாயூர்க் கவிஞர், பண்டிதர் திரு மு. செல்லையா ஆசிரியர் அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு எமது சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றது.

— எம். சி. சுப்பிரமணியம்
சங்கப் பொதுக்காரியதரிசி, வ. இ. க. இ. தொ. சங்கம்

* * * * *

...எப்போ கொழும்புக்கு வந்தாலும் என்னுடன் அன்பாகக் கதைத்துச் சிரித்துத்தான் போவார். நல்ல ஒரு நண்பரை நாங்களும் இழந்துவிட்டோம். ஐயாவுக்குப் பலவகைகளில் ஆறுதல் கூறியுள்ளார். இவ்வளவு கெதியில் இவ்வுலகைவிட்டுப் பிரிவாரென்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. எல்லாம் இறைவன் செயல்.

—திருமதி சிவசிதம்பரம்
100, நோறிஸ் கனல்வீதி கொழும்பு.

* * * * *

சமயப்பணியிலும் சமூகப்பணியிலும் இலக்கியப் பணியிலும் சில அன்பர்களுடன் சேர்ந்து ஈடுபடும்பேறு எனக்குக் கிடைத்துள்ளது. இவ்வன்பர்களுள் கவிஞர்

செல்லையா சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர். இவர் தாழ்த்தப்பட்ட வகுப்பில் உதித்தவராயிருந்த போதிலும் தமது கல்வித்திறத்தினுலும் ஒழுக்கத்தினுலும் ஆசாரத்தினுலும் எல்லோருடைய நன்மதிப்பைப்பெற்றிருந்தனர். "ஒழுக்கமே உயர்குலம்" என்பதை இவர் தமது வாழ்க்கை மூலம் நிரூபித்தனர்.

மேற்குறிப்பிட்ட குணங்களோடு கவிஞர் செல்லையா ஒரு கர்மவீரனுகவும் விளங்கினர். சைவசமயத்துக்கும் புதுவாழ்வு கொடுப்பதற்கு அவர் ஓயாது உழைத்து வந்தார். அப்படி உழைத்துக் கொண்டிருக்கையிலே அவர் உயிர்துறந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

ஆலயப்பிரவேசம் ஓர் அரசியல் கிளர்ச்சியாவதைக்கண்டு அவர் மனம்துடித்தது. சைவசமயிகள் அல்லாதவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடக்கூடாதென்பது அவரது கண்டிப்பான கொள்கையாகும். காந்தியடிகளின் கொள்கையும் இதுவேயாகும். உயர்சாதிமக்களின் மனதைமாற்றி இயன்றவரையில் அவர்களின் ஒத்தாசையுடன் ஆலயப்பிரவேசம் நடைபெற வேண்டுமென்று அன்பர் செல்லையா விரும்பினர். தாழ்த்தப்பட்டோரின் ஆலயப் பிரவேசத்துககுமாருக ஆகமவிதிகள் எடுத்துக கூறப்படுகின்றன. பஞ்சமா பாதகங்களைச்செய்யும் உயர்சாதிமக்கள் ஆலயத்துள் பிரவேசிக்க ஆகமங்கள் இடம் கொடுக்கின்றனவா? தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப்பிரவேசத்துக்கு மாத்திரம் ஆகமவிதிகள் ஏன் எடுத்துக்கூறப்படுகின்றன.

தீண்டாமை நிலைத்திருக்குமாளுல் இந்து சமயம் அழிந்துவிடும் என்று காந்தியடிகள் விடுத்த எச்சரிக்கையை மனதில் வைத்துச் செயலாற்ற வேண்டியது இலங்கைவாழ் சைவமக்களின் கடமையாகும்.

அன்பர் செல்லையாவின் ஞாபகமாக நாம் செய்ய வேண்டியது யாழ்ப்பாணத்துக் கோயிலகள் எல்லாவற்றையும் சைவமக்கள் எல்லோரும் வழிபடுவதற்குத் திறந்துவிடுவதாகும். அப்பொழுதுதான் அன்பர் செல்லையாவின் ஆத்மா சாந்தியடையும்.

— ச. அம்பிகைபாகன் B.A.
அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்

## " கருத்தில் நீங்காத கலங்கரை விளக்கம் "

அன்று நவம்பர் மாதம் இருபத்து நான்காம் நாள் 1966-ம் ஆண்டு. தமிழ் அன்னையின் சீரையும் சிறப்பையும் மேன் மேலும் வளம்படுத்தி வலுப்படுத்த இலங்கை சாகித்திய மண்டல சார்பாக இலங்கைக் கலைக்கழகம் நாடக விழா அமைத்த காலம். அதேபோல் என் கல்லூரியிலும் முத்தமிழ் விழா உருவாகிய காலம். நெருக்கடியான சூழ்நிலை. அப்போது ஒரு மெல்லிய உருவம், சுமாரான உயரம், கதர் வெண்ணிற ஆடை தூய உள்ளத்தைப் பிரதிபலிக்க தோற்றத்துடன், நீறு நிறைந்த நெற்றியுடன், அதற்கு மெருகூட்டிய படி நெற்றியில் சந்தனப் பொட்டுடன், அதை வட்டமிட்ட வண்ணம் கறுத்த மூக்குக் கண்ணாடியுடன் உற்சாகம் பொங்கிய பரபரப்புடன் என்முன் காட்சி அளித்தது.

இருவரும் அமைதியான உரையாடலில் ஒருப்படலானோம். உரையாடலின் உச்சக்கட்டத்தில் சாகித்திய விழாவில் கலந்து திரும்பிய அந்த உருவம் என்னை நோக்கி "தம்பி எனக்கு வயதாகி நான் பென்சனில் போனபோதிலும், இப்பொழுதுதான் இளமையும் வலிமையும் ஊக்கமும் உற்சாகமும் வீரமும்தீரமும் மிகக்கூடுதலாக என்னிடம் குடிகொண்டு இருக்கின்றன. எனவே இனிமேல்தான் நான் முழுமூச்சுடன் முழுநேர ஊழியமாக என் சமூக சேவையில் ஈடுபடப்போகிறேன். வயதுதான் குன்றியதே தவிர என் உள்ளதில் உரமும் வீரமும் குன்றவில்லை. விடுமுறைக்கு விரைந்து வாருங்கள், இது சம்பந்தமாகப் பலவிஷயங்கள் பற்றி அலசி ஆராய வேண்டும்" என்று இன்முகம் காட்டி விடைபெற்று வெளியேறியது அந்த உருவம்.

ஆனால் பதினைந்து நாட்களுக்குள் மின்னமல் முழங்காமல், சொல்லாமல், கொள்ளாமல், எவருக்கும் எவ்வகையான எச்சரிக்கையும் விடாமல் விதிசதி செய்துவிட்டது. விடுமுறைக்கு வீடுநோக்கு முன்னர் மறைவுச் செய்தி கேட்டு இடியேறு கேட்ட நாகம் போலானேன் நம்ப முடியவில்லை. ஓடோடி அவரை நாடி விரைந்து வந்தேன். மனவேகத்தின் பொருட்டு ஓடிச் செல்லும் ரெயில வேகத்தையும் என் உள்ளம் கடிந்து கண்டித்தது. ஆனால் பயன் என்ன? சோதி அணைந்துவிட்

டது, சுடர் நீங்கி விட்டது, பேரொளி புயலுக்குள்ளாகியது இறுதிக் கட்டத்தில் அவரின் உடலைக்கூட காண முடியவில்லை. யாரை நோவது யார்க்கெடுத் துரைப்பது. இறைவா! ஏ இயற்கை அன்னையே! தமிழ் நாட்டின் வளம்மிக்க பகுதியை கடல் கொந்தளிப்பால் காலத்திற்குக்காலம் உன்பால் கொண்டு சென்றநீ, எமது நடமாடும் கலைக் களஞ்சியமாகிய எம் இணைபிரியாத் தலைவன், எம்முள் ஒப்பாரும் மிக்காருமில்லாத் தனிப்பெருந் தலைவன்; எமக்கும் எம்சமூகாயத்திற்கும் அரைநாற்றாண்டு காலமாகத்தன் இன்ப வாழ்வையும், இனிய நேரத்தையும் தியாகம் செய்து, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், உள்ளுவ தெல்லாம் உயர்வுள்க என்ற இலட்சியத்தை மேற்கொண்டு உடலாலும் பொருளாலும் தன்சேவையைப் பிறர்பால் ஈந்து, தான்மெலிந்து நலிந்து போனதியாகியை நமது மத்தியிலிருந்து பிரித்துவிட்டாயே; அவரை வாழவைக்க உனக்குமனம் பொறுக்க வில்லையா? நாம் உனக்கு அப்படி என்ன தான் குறை செய்தோம்? அன்னையே! ஈழ நாட்டின் மனிதப் பண்பாடுதான் எம்மவரைப் பொறுக்கு தில்லை என்றால் உனக்குமாஎம்மைப் பொறுக்கமுடியவில்லை! இயற்கை யாரைத்தான் விட்டது. கவிஞர் மறைந்து விட்டார். உபாத்தியார் தன் இறுதி யாத்திரையை மேற்கொண்டார். ஆனால் இயற்கை அன்னையே! பொறுக்க முடியாமல் எம்தலைவரை எம்மிடமிருந்து பிரித்துச் சென்ற நீ அவருடைய பூதவுடலை எடுத்துச்சென்று விட்டாயே அல்லாமல், அவரது சதைப்பிண்டத்தை எடுத்துச் சென்று விட்டாயே அல்லாமல், அவரது புகழுடலையும் உன்னால் எடுத்துச் செல்ல முடியுமா? இது சவால் ஆம். நமது உபாத்தியாயர் மறையவில்லை. எமது கவிஞரின் சுடர் அணையவில்லை. அவர் இறக்கவில்லை. அவர் நம்மைவிட்டுப் பிரியவில்லை, எமது கலங்கரை விளக்கம் மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கம்போல் இயற்கைக் கொந்தளிப்பையும் எதிர்த்து வாழ்கின்றது, வாழ்ந்து கொண்டே இருக்கும். நாம் வாழவும் வைப்போம். எம்உள்ளத்தின் நீங்காத நினைவாகக் குடிகொண்டு விட்டார். எவ்வகையான கொந்தளிப்பும் அவரை நம்மத்தியில் இருந்து பிரிக்கமுடியாது. எடுக்க முடியாது.

எமது ஊரவர்களின் முன்னோடியாக, விடிவெள்ளியாக விளங்கிய நமது உபாத்தியாயர் அவர்கள் நம்

சமுதாய மத்தியில் "உபாத்தியாயர்" என்ற பதத்தை தனக்கெனத் தனியாக அமைத்து எல்லோராலும் ஏகோபித்து மதிக்கப்பட்டு யாவருடைய உள்ளங்களையும் அன்பால் கவர்ந்த செம்மலாவர், பகை அற்றவர், பகை பாராட்டாத பண்பாளர், வள்ளுவத்தையும் காந்தியத்தையும், சைவசமய நெறிகளையும் தன் வாழ்க்கையின் உட்கருத்தாக, குறிக்கோளாக அமைத்து உறுதியாக வாழ்ந்து வெற்றி கண்ட உத்தமர்.

உபாத்தியாயர் அவர்கள் ஆற்றிய தொண்டினை நாம் அளவிட்டுக் கூறமுயல்வோமேயானல், கடற்கரையில் செறிந்து விளங்கும் மண்குவியலின் மண்ணின் தொகையைக்கணக்கிட்டு கூறமுனைந்த பித்தர்களாவோம் எனினும் அவற்றுள் சிலவற்றை நான் குறிப்பிட்டுக்கூருமல் இருக்க முடியாது.

காலம் மனிதனுடைய வாழ்வில் ஒருமுக்கிய இடத்தை வகிக்கின்றது. காலமும் நேரமும் காத்திருக்காது. காலத்தால் உருப்பெற்ருேர் பலர். காலத்தை உருவாக்கியவர்கள் மிகச்சிலர். அவ்வரிசையில் நமகவிஞர் அவர்கள் காலத்தால் உருப்பெற்ருர். அதேநேரத்தில் காலத்தையும் உருவாக்கினர் என்ருல் மிகையாகாது. மிகக பொருத்தமுங்கூட. இன்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிலவிய சூழ்நிலையை ஆராயும்போது எமதுசமூக வரலாற்றில் அக்காலம் ஒரு இருண்ட காலமென்றே கூற வேண்டும். சமூகநிலை, பொருளாதாரநிலை, கல்விநிலை இன்னபிற, கவலைக்குரிய நிலையில் அமைந்த காலம். நமதுமக்களின் மத்தியில் கல்வி இருந்தும், நம்மக்களுக்குக்கண்கள் இருந்தும் அவர்கள் காணும் திறமை அற்று, அறியாமை என்னும் பள்ளத்தில் வீழ்ந்திருந்த காலம். சந்தர்ப்பம் நம்மை விட்டு விரட்டப்பட்ட காலம். உரிமை கிடையாது. வாய்புக்கிடையாது. இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் நமகவிஞர் அவர்கள் உள்ளத்தில் ஒளி பெற்று, உடலில் ஊக்கம் பெற்று, உறுதி குன்ருஉற்சாகத்துடன், வெள்ளத்தின் பெருக்கம்போல் தம்பால் வந்த கலைப்பெருக்கையும் கவிப்பெருக்கையும் பரிந்து பெற்றுத் தெள்ளுற்ற தமிழ்அமுதின் சுவையைக்கண்டு இங்கு அமரர் வாழவு கண்டு, தன்பின் சந்ததியினர் பலரையும் கண்களைபெறச் செய்து அவர்களுக்கும் காணும் திறமையைக் கொடுத்து, பலதுறைகளில் அமர

வாழ்வை அவர்களுக்கெல்லாம் அளித்த பெருமைக்கு அவருக்கு அவரே உவமை. இச்சூழ்நிலையை அமைக்க அன்றவர் அக்காலத்தையும் எதிர்த்து, எதிர்நீச்சல் அடித்து நீந்தி வெற்றி கண்டமையால் தான் இன்று எமதுசமுதாய மத்தியில் சீர்பெற்ற மக்கள் கூட்டத்தை உருவாக்க முடிந்தது.

இன்று நம் ஈழவள நாட்டில், அரசியல் வானில் நிலவும் தலையான சமூகப் பிரச்சினைகளுள், நம்மவர்கள் மத்தியில் நிலவும் தலை நாணக் கூடிய தீண்டாமை என்னும் கொடிய நோயை உரமூட்டி வளர்த்து வருபவர்கள் நம்மக்கள். அந்நிய நாடுகளாகிய ஆபிரிக்கா, அமெரிக்கா ஐரோப்பா ஆகிய நாடுகளில் நிலவும் நிறத் துவேஷ வெறியை பூண்டோடு அழிக்கக் குமுறும் உள்ளங்களுடன் கொந்தளிக்கும் உணர்ச்சியுடனும், சர்வதேச சங்க மூலம் மனித உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் குரல் கிளப்பும், திரண்டு எழும் பரந்த உள்ளம் படைத்த நம் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெருமக்கள் மத்தியில் தம்மையும் தம் சூழ்நிலையையும் தாம் உரம் ஊட்டி வளர்த்து வரும் கொடிய தீண்டாமையையும் மறந்து போராடும் நம் பழம் பெருமை குவிந்து, நிறைந்து வழிந்து, பொங்கும் தமிழ் குடிமக்கள் மத்தியிலும், நம் கவிஞர் அவர்கள் தன் பகுத்தறிவுக் கண் கொண்டு இற்றைக்கு நான்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னேயே நம்சமூக விடுதலைக்கு விடிவுகாண உறுதியான உள்ளத்துடன் உழைக்கலானார். விடுதலைபாதையைநாடி. நம்தூங்கிக்கிடந்த சமூதாயமக்களைத் தூண்டிக் கிளப்பி, விழிப்புறச் செய்தார். இத்துறையில் நமது கவிஞர் நிலையைத்தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய பாரதியின் நிலைக்கும்; பிரான்சு நாட்டைத் தட்டி எழுப்பிய ருஷ்ஷோ, வோல்ரேர், மொன்ரெஸ்கோ ஆகியவர்களுடைய நியுலைடனும் பெருமையுடன் ஒப்பிடலாம்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியகாலம். மதமாற்றம் தீவிரமாக நிலவியகாலம் நம் கவிஞர் அவர்கள் தம்சுய வாழ்வை மேலும் வளம் பெறச் செய்ய வேண்டுமாயின் கிறீஸ்தவ சமயத்தைத் தழுவி இருக்கலாம்.

அல்லாமலும் இன்றைய சூழ்நிலையில் சிறுபான்மைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில், சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்த மட்டில் அவர்கள் சைவசமயத்தைக் கட்டித்தழுவி இருக்கவேண்டிய அவசியமே கிடையாது என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கலாம். காரணம் பழுத்த சைவசமய மக்களே தீண்டாமை என்னும் வேண்டாமைக்குப் பல்வேறு மெருகு கொடுத்து வாழவைப்பதில் தமக்கெனப் பெருமையும் உரிமையும் பெற்றவர்கள். ஆனல் நம் கவிஞர் அவர்கள் சைவ சமயத்தில் இருந்து கொண்டே நாம் போராடி உரிமை பெறவேண்டும் என்று உறுதியாக எண்ணிச் சைவனுகவே பிறந்து, சைவனுகவே வாழ்ந்து, சைவனுகவே மாண்டார். மதமாற்றத்தை வெறுத்தார், வன்மையாகக் கண்டித்தார். இதிலிருந்து நம கவிஞருக்குச் சைவசமயத்தில் இருந்த ஈடுபாட்டை நாம் மதிப்பிட்டுக் கொள்ளலாம். இவர் வளர்த்த கலைக்கூடமாகிய தேவரையாளிச் சைவ வித்தியாசாலை, ஸ்ரீ லங்கா வித்தியாசாலை போன்ற நிறுவனங்களால் தான் இன்று வடமராட்சியில் நம் மக்கள் மத்தியில் சைவசமயச் சூழ்நிலை அமைந்துள்ள தென்றல் மிகையாகாது.

சமயமும் சமூகமும் இவரது இரு கண்கள். சமூகத் துறையில் இவர் ஆற்றிய சேவை அளப்பரியது. தனிப்பட்ட முறையிலும் ஸ்தாபன ரீதியாகவும் மகத்தான சேவைசெய்து சேவையின் சின்னமாக விளங்குகிறார். இவர் காந்திய சேவா சங்கம், இலங்கை வலிபர் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்து சமூகப் புரட்சியை உருவாக்கினர். சிறுபான்மைத் தமிழர் மகா சபை, வடமராட்சி சமூக சேவா சங்கம், அல்வாய் மனேகரா சனசமூக நிலையம், ஆலடிபரிபாலன சபை, இன்னபிற நிறுவனங்களின் ஆரம்ப கர்த்தாக்களுள் முதல்வருள் முதல்வராவர்

சமூக சேவையில் நம்மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் ஊட்டிய பெருமை இவருக்கே உரியது.

இவரது இலக்கிய சேவை அளவிடற்கரியது. இவரது இலக்கியப் படைப்புக்களாக அன்றைரின் வளர்பிறை; வண்டுவிடு தூது; பாஷைப் பயிற்சி நூல், முரு

கன் மீதுபாடிய பதிகங்கள் பல சிறப்பாகக் குறிப்பி டக் கூடியவை. இத்துறையில் நம்கவிஞர் அவர்கள் ஈழத்து இலக்கிய வட்டாரத்தில் தனக்கெனத் தனி இடத்தை அமைத்துள்ளார். தன்பரந்துபட்ட இலக்கி யச்சேவையால் கவிஞர் என்னும் பட்டத்தைப் பெற்றார். இவர் கவிதைகளில் சொல்நயம், பொருள்நயம், நகைச் சுவை, இலட்சியம், அறிவுரை, சிலேடை நயம், எளிமை நடை, கருத்தாழம் முதலியன துள்ளுநடை போடும்.

கல்வெட்டு இயற்றுவதில் விரைவிற்கும் பொரு ளுக்கும் இவருக்கு இவரே உவமை. இவரின் பாவொலி கேட்டகா மேடையே வடமாகாணத்தில் இல்லை என்று கூறலாம். இவ்வாறு யாவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆயிரக்கணக்கான பல பாடல்களையும், கருத் துரைகளையும் தன்கவிதை மூலம், கட்டுரை மூலம், சிறு கதைகள் மூலம், கருத்துரைகள் மூலமும், நாடகங்கள் மூலமும் வழங்கியுள்ளார்.

எமது கவிஞருடைய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் ஒன்று திரட்டி மதிப்பீடு செய்யும்போது அவர்கற்றோர் மத்தியிலும், மற்றோர் மத்தியிலும், இளை ஞர் மத்தியிலும், பெரியோர் மத்தியிலும் அவரவருக்கு ஏற்றவண்ணம் தன் இயல்புகளை மாற்றி அவர்களது அன்பைப் பெற்றவராவர். சிறந்த ஆசானுகவும், ஒப் பற்ற சமூக சீர்திருத்த வாதியாகவும், பண்புள்ள சமய வாதியாகவும், ஆழ்ந்த அரசியல் வாதியாகவும் உயர்ந்த பண்புள்ள மனிதனுகவும் வாழ்ந்த நம் உபாத்தியாயர் வாழ்வில் சோக்கிரதிசின் சிந்தனை வளமும், பிளேற் றோவின் செயல்திறமும், ஆபிரகாம் லிங்கனின் மனத் துணிவும், ரூசோ, வோல்டெயர், மென்ரோஸ்கோ போன் ருேரின் மனஎழுச்சியும் மகாத்மாகாந்ஜியின் அடக்க மான அமைதியான உண்மை என்னும் இலட்சியமும் தாகூர், வேர்ட்ஸ்வெத் போன்ருேரின் இயற்கைரசனை யும், நேருவின் சமாதான எண்ணமும், புத்தபிரானின் கருணையும், யேசுநாதரின் அன்பும் ஒன்றுசேர்ந்து மிளிர் கின்றன. இச்சக்திகள் யாவும் ஒருங்குசேர்ந்து உருப் பெற்றவர்தான் நம்மதிப்பிற்கும் அனபிற்குமுரிய அல் வாயூர் கவிஞர் செல்லையா அவர்கள்.

இவ்வாறு தன் பல்வகைப்பட்ட இலக்கியப் படைப்புக்களின் வாயிலாகத் தான் பிறந்த ஊர், தான் பிறந்த சமுதாயம், தான் பிறந்த நாடு, தான் பேசும் மொழி முதலியவற்றின் வளத்திற்காகப் பிரதேச ரீதியாகத் தன் சேவையை ஆற்றியுள்ளார். இத்துறையில் ஈழநாட்டு இலக்கிய வானில் நம் கவிஞர் ஒரு தேசியக் கவிஞராக விளங்கினார் என்றால் சாலப் பொருத்தமானது. தேசிய இலக்கியத்தில் இவருக்கு ஒருதனி இடம் உண்டு.

அரை நூற்றாண்டுகாலம் நம்மவர் மத்தியில் சமூக பொருளாதார சமய, அரசியல் துறைகளில் அளப்பரிய சேவை செய்து தன் இறுதிமூச்சு உள்ளவரை, உழைத்துச் சேவைக்குச் சென்றே சடுதியாக உயிர் நீத்த நம் பெரியாரை, நமக்கெல்லாம் வழிகாட்டியாக, கலங்கரை விளக்கமாக, முன்னோடியாக வாழ்ந்து தன்பின் சிறந்த சந்ததியாரை உருவாக்கிய பெருந்தகையாம் கவிஞரை நாம் எப்படி மறப்போம், அவர் என்றும் நம் நினைவில் நீங்காமல் நிலவுவார். நம் சமூக வரலாற்றில் கவிஞர் யுகம் என்றே பொன் எழுத்தால் பொறிக்கப் படும். அவர் விட்டுச் சென்ற, தொட்டுச் சென்ற இலட்சியத்தை நாம் தொடர்ந்து செய்து வெற்றி காண்பதே நாம் நம் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய நம் காலம் சென்ற உபாத்தியாயர், கவிஞர் செல்லையா அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையாகும். செலுத்த வேண்டிய அஞ்சலியுமாகும்.

வாழ்க நம் உபாத்தியாயர் நாமம்!
வளர்க அவர் இலட்சியம்!!
அடைக அவர் ஆத்மா சாந்தி!!!

— த. இராசலிங்கம் M.A., Di p-in-Ed.

"ஈழநாடு" தலையங்கம் (12-12-66)

## அல்வாயூர் செல்லையா.

கவிஞர் அல்வாயூர் செல்லையாவின் மறைவு ஈழத்துக்கும், சிறப்பாக தமிழ், சைவசமூகத்துக்கும் ஒருபெரிய இழப்பாகும். சைவநெறி நின்று வாழ்ந்த அந்த ஹரிஜனப் பெரியாரை, சாதி இறுமாப்புக் கொண்டவர்களும் கூட மதித்துவந்தனர். அவர் தமது ஒழுக்கத்தாலும் சைவப் பண்பினாலும் ஹரிஜன சமூகத்தின் மதிப்பையே உயர்த்தியவர். அந்தச் சமூகத்துக்குப் பலபல சிறுமைகள் செய்யப்பட்டும் சற்றும் மனக்கசப்போ துவேஷமோ கிடையாது.

"கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்று அளவு கடந்த பொறுமையுடனே தமது சமூகத்துக்குப் பலவிதங்களிலும் நல்வழி காட்டி வந்த தலைவரவர். சிறப்பாக ஆலயப்பிரவேச இயக்க விஷயமாக உணர்ச்சி வேகம் கிளம்பித் துவேஷமும் பலாத்காரமும் தலைதூக்கும் சமயத்தில், சமாதான சமரச முறையிலே இதைத் தீர்க்கவேண்டுமென்று கூறி, அதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டுவந்தார் அவர்.

கவிஞர்கள் அதிகமுள்ள ஈழத்திலே, வானொலி "ஈழநாடு" நடத்திய கவிதைப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றார். இது தமது சொந்தப் பெருமையல்ல என்றும், தமது சமூகத்துக்கே இப்பெருமை சேரவேண்டும் என்றும் அவர் கூறுவார். சமீபத்தில் ஆசிரியர் தொழிலிலிருந்து ஓய்வுபெற்றபின், இனி தமது வாழ்க்கையைத் தமது சமூகப்பணிக்கே செலவிடத் தீர்மானித்து அவ்விதமே பல முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். இச்சமயத்தில் அவர் திடீரென மறைந்தது, அச்சமூகத்துக்கு எவ்வளவு பெரிய நஷ்டமென்பதை விளக்கத் தேவையில்லை.

தம் சமூகத்தவர், சைவநெறியில் நின்று பலதுறைகளிலும் முன்னேறி ஓங்கவேண்டுமென்பதில் அவருக்கு இருந்த ஆர்வம் கொஞ்சமன்று. அவரது வாழ்க்கை சிறப்பாக ஹரிஜன வாலிபர்களுக்கு நல்லதோர் முன்மாதிரியாகும். அதைப் பின்பற்றி, தெய்வ நம்பிக்கையுடனே சைவப்பண்புடனே வாழ்ந்து, மற்றச் சமூகத்தவரின்

நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்று, தங்கள் சமூகக் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதாயின் அதுவே மறைந்த அப்பெரியாரின் ஆன்மாவுக்குப் பெரிய சாந்தியாக இருக்கும். அவரைப் பிரிந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சமூகத்தாருக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்கள்.

**"தினபதி" 16-12-1966.**

## அருமைமிகு அல்வாயூர் கவிஞர்.

தமிழ் — சைவம் — சமூகம் என்ற மூன்றிற்காவும் முன்னின்று உழைத்த, கவிஞர் அல்வாயூர் செல்லையாவின் மறைவு தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பெரு நஷ்டமாகும்.

### இழந்துவிட்டது

தமிழுலகம் ஒரு தரமான கவிஞனையும், சைவம் ஒரு சிறந்த பக்தனையும், சமூகம் ஒரு சிறந்த வழிகாட்டியையும் இழந்தது. சிறுபான்மைத் தமிழர், தமது சமூகத்தின் உயர்ச்சிக்காக அயராது பாடுபட்ட ஒரு தலைவனையும் முன்னோடியையும் இன்று இழந்து தவிக்கிறார்கள்.

### சாந்தப்படுத்தினர்

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சிலர் துடித்தெழுந்தபோது, அவற்றிற்கு நல்வழிகாட்ட முன்னின்று உழைத்தார் கவிஞர் அல்வாயூர் செல்லையா. "பொங்கி எழுவதால் காரியம் கடவாது; பொறுமையோடு செயலாற்றினால் எல்லாம் சுகமாக முடியும்" என்று எடுத்துக் கூறி, சாந்தப் படுத்தினர்.

### பரிசு பெற்றார்

கவிதை புனைவதில் அவருக்கு இருந்த ஆற்றலை நாடறியும். இலங்கை வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற நம் கவிஞர் அந்தப் பெருமையையும், புகழையும் தாம் அனுபவிக்க விரும்பாது தமது சமூகத்

திற்கு அர்ப்பணித்தார். தமக்குக் கிடைக்கும் பெயரும், புகழும் தமது சமூகத்திற்கே சேர வேண்டும் என்று எப்பொழுதும் விரும்பிய கவிஞர் செல்லையா சமூகத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்தார்.

## எழுத்தாளர்

திரு. செல்லையா கவிஞர் மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளருமாவர். நகைச்சுவைக் கட்டுரைகள் மூலம் இக்காலத்து தமிழர்களின் வாழ்வில் புரையோடியுள்ள குறைகளை நசுக்காக எடுத்துக்கூறி சீர்திருத்தப்பணி புரிந்தவர் அவர்.

## பண்பாடு

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்ப்பண்பாட்டையும், சைவ நெறியையும் கண்ணெனை மதித்துக் கடைப்பிடித்து வந்த உத்தமர் அவர். ஆகின் அவருடைய இழப்பு தனி ஒரு பிரிவினரை மட்டுமல்ல தமிழர் அனைவரையுமே மீளாத் துயரில் ஆழ்த்துவதாகும்.

---

**"சிந்தாமணி" 19-12-66**

# வண்டு பறந்தது!

(இ. அ.)

"கனகாம்பரம் வாடியது" என்ற தலைப்பில் பிரபல எழுத்தாளர் ஒருவர் ஒரு சமயம் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இந்தத் தலைப்பை சிலரால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

"கனகாம்பரம்" என்ற சிறுகதைத் தொகுதியைத் தந்த தமிழ்நாட்டுச் சிறுகதை மன்னன் கு. ப. ரா. அமரராகி விட்டார் தெரியுமா? என்று கொஞ்சம் விளக்கமாக சொன்ன பின்னர்தான், "அப்படியா சமாச்சாரம்?" என்று அதிசயப்பட்டார்கள் அவர்கள்! அது அந்தக் காலம்.

இந்தக் காலத்தில் "வண்டு பறந்தது!" என்று எழுதும் போது, அப்படியான ஒரு நிலைமை ஏற்படக்கூடாதென ஆசைப்படுகின்றேம்.

இலக்கியப் பூங்காவிலே ரீங்காரம் செய்து வந்த ஒரு வண்டு சில தினங்களுக்கு முன்னர் பறந்து விட்டது! "புதிய வண்டு விடு தூது" பாடி இக்கால நவீன நங்கையரின் நடை உடை பாவனைகளை நகைச்சுவை நனி சொட்டச் சொட்டச் சாடிய வானெலிக் கவிஞர் இனி எமக்கு இல்லை.

"அருமை மிகு அல்வாயூர்க் கவிஞர்" எனத் "தினபதி" உருக்கமாகக் குறிப்பிட்டுள்ள கவிஞர் மு. செல்லையா இப்படி எல்லாம் சிட்டாய்ப் பறந்திடுவார் என எவருமே கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்.

ஒரு மாதத்துக்குமுன்னர் இங்கு வந்திருந்தபோது சுயாதீனப் பத்திரிகா சமாசம் நவீன முறையில் பத்திரிகைகள் வெளியிடுவதை நேரிற் கண்டு மகிழ்ந்தார்.

இத்தகையதொரு பண்பாளர், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் எனத் தமிழ்ச் சமூகம் பிரித்து வைத்த போதிலும், அவர்பக்தி மிகு சைவசீலராக விளங்கித் தமிழணங்கின் புகழ் பாடினர்.

பகட்டான பட்டின வாழ்க்கையை விரும்பாத பாவை ஒருத்தி தனது செல்வ வாழ்வு எப்படி அமைகின்றது என்பதை நவநாகரிக நங்கையிடம் கூறுவதாகக் கவிஞர் பாடியிருக்கும் அழகே தனி. சுவைப்பதற்கு அதில் ஒன்று:

"அந்தியில் வீடுசேர அன்புடன் செப்பு நீரால்
வந்திடு வியர்வை நீக்கி மற்றவர்மேல் துடைத்துத்
தந்திடும் பாய்த்தடுக்கில் தனி மகிழ்வோ டிருத்தி
மூந்துமோர்கொடுக்க உண்டு முகமலர்வதுவோர் செல்வம்"

சிறப்பு மிக்க ஓர் இலக்கியப் பரம்பரைக்கு நாம் சொந்தக்காரர் என்று மார்பு தட்டுமளவுக்குப் பாட்டிலும் உரையிலும் இலக்கியம் படைத்தவர் எங்கள் கவிஞர் செல்லையா.

"புலவனாக ஏன் பிறந்தேன்? பிழைக்கவும் வழி இல்லையே!" என்று தம்மையே நொந்த புலவர்களைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம்.

ஆனால் கவிஞர் செல்லையா "ஈயாய்ப் பிறந்தி லனே!" என்று ஓரிடத்தில் மிகவும் அங்கலாய்த்துப் பாடியிருக்கின்றார்.

போதை யூட்டும் பனங்கள்ளின் மீதுள்ள ஆசை மிகுதியினால் கவிதையே பிறந்து விடுகின்றது. "ஈயாய்ப் பிறந்திலனே கள்ளில் மூழ்கி இறப்பதற்கே!" என்ற அடியைப் படிக்கும்போது நகைச்சுவை அப்படியே துள்ளிக் குதித்துக் குமிழி விடுகின்றதல்லவா?

கவி பாடும் அந்த வண்டு எங்கோ பறந்து விட்டதென்பது உண்மை. எனினும் அதன் ரீங்காரம் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

---

**The Co-operator 1-1-67**

# ALVAAYOOR KAVIGNAR

## (அல்வாயூர்க் கவிஞர்)

The late M. Chelliah, poet, pandit, wit, reformer, was one of the first fruits of the stirring of discontent in the hearts of Jaffna's under-privileged. In Vathiry near Alvay there is an articulate group of Minority Tamils, whose first spokesman was Sooran, a devout Saivite, vegetarian and Gandhiite. He realised that education was the key to emancipation of his people and founded a school — the Thevarayali Saiva Vidyasalai (now Thevarayali Hindu College). I do not know the legal position. But I do know that he was the moving spirit behind the school and compaign against the caste disabilities in the area was spearheaded by Sooran and his associates. Chelliah grew up under Sooran's wings and when the Youth Congress was active, Chelliah identified himself with its programme. Although he and his people had good

cause to embittered, Chelliah, though deeply concerned, elected to walk in Gandhi's footsteps, practising the soft answer technique.

His literary efforts began in the days of Eelakesari and at the time of his death, he had secured for himself an assured position as one of Jaffna's outstanding writers. His collection of poems entitled Waxing Moon (வளர்பிறை) had its inauguration (அரங்கேற்றம்) in 1952 and it was on that occasion that the veteran scholar Navaneetha Krishna Bharathiyar conferred on him the title of Kavignar (கவிஞர்). Although well versed in Pandit lore and could on occasion display the linguistic legerdemain Punditry, the reader to whom he addressed his verse was often the child or the average literate person.

* * * * *

## நன்றி.

எங்கள் அருமைத் தந்தையார் கவிஞர். திரு. மு. செல்லையா அவர்களின் இறுதிக் கிரியையின்போது வருகைதந்து பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபத்தந்திகள், செய்திகள், அஞ்சல்கள், அனுப்பிய மன்றங்களுக்கும், கழகங்களுக்கும், பெரியோர்களுக்கும், தம் பத்திரிகைகளின் மூலம் அவர் புகழ் பரப்பி அனுதாபம் தெரிவித்த பத்திரிகைகளுக்கும், அவைகளின் ஆசிரியர்களுக்கும், பல உதவிகள் செய்த எம்சமூகப் பெரியோர்கள், நண்பர்கள்; அன்பர்கள், இளைஞர்கள், ஆகியோருக்கும் அந்தியேஷ்டிக் கிரியையின்போது பங்குபற்றியவர்களுக்கும, நினைவுமலர்களை ஞாபகமாக உருவாக்கிய எல்லோருக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| | மகன்: | விவேகானந்தன் |
| 'பாரதி பவனம்' | மருமகன்: | இ. இரத்தினராஜா |
| அல்வாய் | சகோதரர்கள் | மு. வைத்திலிங்கம் |
| 8-1-67 | | மு. பொன்னையா |

---

வட இலங்கைச் சைவசமய சமரச சங்கத்திற்காக வே. க தணிகாசலம் அவர்களால் அச்சிடப்பெற்று அல்வாய் தெற்கில் வெளியிடப்பட்டது.
ஊழியன் அச்சகம் பருத்தித்துறை

# கவிஞரின் அமரத்துவம்.

எமது ஸ்தாபனத் தந்தை
கவிஞர்

## மு. செல்லையா ஆசிரியர் அவர்களின்

### அகால மறைவின் போது.........

எமக்கோர் மன்றமமைத்து, என்றும் இளமை மாரு 'மனோகராப்'பெயர்சூட்டி மாண்புபெறவைத்த எந்தையே நீவிர் சடுதியில் எம்மைப்பிரிய நாமிழைத்த தவறு என்னே? எம்மூர் வளர்ச்சிக்காக இன்னலுற்று, என்பு ருகப் பாடுபட்ட ஏந்தலே!

நம்மை கலங்கவிட்டு எம்கடன் தீர்க்கு முன்னே, மறைந்த மாயம் என்ன ஐயா?

சைவசமயச் சங்கமமைத்து சமூகக்குறை பாட்டைத் தீர்ப்பான் வேண்டி, பெருமககள் பலரைக் கண்டு பேசச் சென்ற பெருமகனே!

பிரதமர் லால் பகதூர் போலப் பேரிடிச் செய்தி தந்ததென்னே?

சிந்தனையில் சிறந்த கருத்தும், நாவினில் இனிய கவியும் உள்ளத்தில் ஊக்கமும் கொண்ட தாங்கள்

எமக்கு எதுவும் கூருது மின்னலென மறைந்ததேனே? வந்தாரை வரவேற்று வேண்டுவன செய்யும் வள்ளலே! புன்னகை தவழ் நின்முகத்தைக் கடிதினில் ஏன் மறைத்தீர்? கல்வி வளர்த்தீர்! கலை வளர்த்தீர்! பண்பு வளர்த்தீர்!

ஆனல் தங்கள் உயிர் வளர்க்க மறந்ததேனே? பிறந்தோரைப் போற்ற, வாழ்வோரை வாழ்த்த, மறைந்தோர் புகழ்பாட இனி எங்குதான் செல்வோம் ஐயா?

அடக்கத்தின் உருவம், உறுதிக்கு ஒரு சான்று, அறிவின் உறைவிடம், கடமைக்கு ஒரு விளக்கு, தியாகத்தின் சின்னம, சுடர்தெறிக்கும் அல்வை மணி நீங்காத் துயில் கொண்டதே.

சமர்ப்பிக்கிறோம் எம் அன்புள்ளங்களை எந்தையின் பாதத்தில் இறைஞ்சுகிறோம் இறைவன் பாதம் அவர்தம் ஆத்மா சாந்திக்காக

## சாந்தி, சாந்தி ஓம் சாந்தி.

—அல்வாய் மனோகரா நிலையத்தினர்.

## கவிஞரின் நூல்கள்.

1. தேசிய கீதங்கள்
2. சுகாதார சுலோகங்களும் கும்மியும்
3. "வளர்பிறை" கவிதைத் தொகுதி
4. குமராபுரக் குமரவேள் பதிகம்
5. "வண்டு விடு தூது"
6. தங்கத்தமிழ்க் கண்
7. கதிர்காமக் கந்தப்பெருமான் வேல் வெண்பா
8. முருகமூர்த்தி தோத்திரக் காரிகை
9. பாஷைப் பயிற்சி 1963
   (ஜீ. சீ. ஈ. [illegible]கலிய, உயர்தர வகுப்புகளுக்கு)
10. கந்தவனநாதர் தோத்திரக் காரிகை
11. செல்வச்சந்நிதி சுப்பிரமணிய சுவாமி துதி
12. வற்றாப்பளை அம்மன் துதி
13. அல்வாய் வேவிலந்தை அம்மன் பதிகம்
14. * கவிதை வானிலே ஒரு வளர் பிறை

* கவிஞர் அவர்களின் வளர்பிறைக் கவிதைத் தொகுதியை விமர்சித்து நயம்பட இரசிகமணி திரு. கனக. செந்திநாதன் அவர்களால் வரதர் வெளியீடாக வெளிவந்த நூல்.

கவிஞர் அவர்களின் இக்கிளைவு மலரிலே இடம் பெற வந்த பல கட்டுரைகள், கவிதைகள் இடம்பெற இயலவில்லை. கவிஞரின் கவிதைத் தொகுதியில் அவைகள் இடம்பெறும்.